Tamil Heritage Foundation

தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials

e-Book series

an international NGO initiative to digitize old Tamil books and palm leaf manuscripts

visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை

தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

Registered No. M. 1434.

# நாடார் குல மித்திரன்.

அருப்புக்கோட்டை நாடார் கல்விப் பிரசங்க
சபையினின்று வெளிவரும்,

ஒரு மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்." (திருக்குறள்)

வருஷம் 1 } 1920ளு பிப்ரவரிமீ
சித்தார்த்திளு தைமீ {மாதம் 6

வியாச விஷயங்கள்.


| | | | |
|---|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம் | ... | 161 |
| 2. | எனது சந்தோஷம் | ... | 162 |
| 3. | இலங்கை நாடார்கள் வர்த்தகம் | ... | 163 |
| 4. | தூத்துக்குடி. | ... | 167 |
| 5. | பத்திராதிபர் குறிப்பு | ... | 185 |
| 6. | விநோத கணித வினா | ... | 187 |
| 7. | பொது சமாச்சாரம் | ... | 188 |
| 8. | கல்லூருணி | ... | 189 |
| 9. | மதிப்புரை | ... | 191 |
| 10. | என் ஆடையாபரணம் | ... | 192 |
| 11. | அநுபந்தம். | ... | |


ஸ்ரீ சு. ஆ. முத்துநாடார் பத்திராதிபர் பத்திராசிரியர்.

நவரத்னம் பிரஸ், மதராஸ்.

1920.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

## சந்தாதாரர் கவனிக்கவேண்டிய விதிகள்.

1. பதில் தெரிய விரும்புவோர் ரிப்ளை எழுதவேண்டும்.

2. சந்தாதாரர்கள் தமது நெம்பரைக் குறித்தனுப்புவதுடன் முழு விலாசத்தையும் விவரமாகத் தெரிவிக்க வேண்டும்.

3. இராஜ விரோதம், புறமத தூஷணை முதலிய அனுவசியமான கடிதங்களை அங்கீகரிக்க முடியாது.

4. கடித விஷயதான மெழுதுவோர் பொதுவான வியாசமாகவே எழுத வேண்டும். அனுவசியமான வியாசங்களை பதிப்பிக்க முடியாது.

5. சந்தாதாரராய்ச் சேரவிரும்புவோர் முன்பணமேனும் வி.பி யிலேனும் செலுத்தலாம்.

6. எந்தமாதத்தில் சந்தாதாரராய்ச்சேர்ந்தாலும் முந்திய பத்திரிகைகளையும் சேர்த்தனுப்பப்படும்.

7. படிக்கத் தெரியாமலும், வித்தியாசமான பதப்பிரயோகமும், கடிதமிரண்டு பக்கமும் எழுதிவரும் வியாசங்களை கவனிக்க முடியாது.

## சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய விடங்களுக்கு தபாற்கூலி யுள்பட வருட மொன்றுக்கு ரூபா 1 8 0.

சிங்கப்பூர், நெட்டால் முதலிய ஜலப்பிரதேசங்கட்கு தபாற்கூலி உள்பட வருடமொன்றுக்கு ரூபா 2 0 0.

ஆறுமாத சந்தா கிடையாது.

---

## விளம்பர விகிதம்.

| | | | |
|---|---|---|---|
| மாதம் ஒன்றுக்கு | 1-பக்கத்திற்கு | ரூபா | 3 0 0 |
| ,, ,, | ½-பக்கத்திற்கு | ,, | 2 0 0 |

நீடித்தகால விளம்பரங் கொடுப்போர்களுக்கு சந்தாற்பானு சாரமாய் சகாயமான சார்சுக்கு விடப்படும் ரிப்ளை எழுதி பதில் தெரியலாம்.

---

## போஷகர் விவரம்.

மொத்தமாக ரூபா 50 கொடுப்பவர்கள் போஷகர்.
மொத்தமாக ரூபா 25 கொடுப்பவர்கள் ஜீவியசந்தாதாரர்.

இப்படிக்கு,
சு. ஆ. முத்து நாடார்,
பத்திராதிபர்.
நாடார் குல மித்திரன் ஆபீஸ்,
அருப்புக்கோட்டை.

வேலுமயிலுந்துணை.

# நாடார் குல மித்திரன்.

அருப்புக்கோட்டை நாடார் கல்விப்பிரசங்க சபையினின்று வெளிவரும்

ஒரு மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

வயது 1. } 1920ஆம் பிப்ரவரிமீ சித்தார்த்தி ஆம் தைமீ { மாதம் 6.

## கடவுள் வணக்கம்.

கல்லேனு மையவொரு காலத்தி லுருகுமென்
கன்னெஞ்ச முருக விலையே
கருணைக்கி ணங்காத வன்மையையு நான்முகன்
கற்பிக்க வொரு கடவுளோ
வல்லான் வகுத்ததே வாய்க்கா லெனும்பெரு
வழக்குக் கிழுக்கு முண்டோ
வானமாய் நின்றின்ப மழையாயி றங்கியெனை
வாழ்விப்ப துன்ப ரங்காண்
பொல்லாத சேயனிற் றுய்தள்ள னீதமோ
புகலிடம் பிறிது முண்டோ
பொய்வார்த்தை சொல்லிலோ திருவருட் கயனுமாய்ப்
புன்மையே னுவ னங்தோ
சொல்லான்மு ழக்கிலோ சுகமில்லை மௌனியாய்ச்
சும்மா விருக்க வருளாய்ச்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுக வாரியே.

---

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

# எனது சந்தோஷம்.

என்னின ஜனாபிமானிகளே! மாதந்தோறும் உங்கள் மடிமேற் குழவியென விளையாடும் நான் வெளிவரும் வேலைக்குக் கைக்கூலி வாங்கி, அச்சிடும் அச்சாபீசில் நேரும் இடையூறுகள் பல. சிரமத்தையுங் கைப்பொருப்பையுங் கவனியாது உழைக்கும் அதிபரின் முயற்சி அளவிலா திருந்தாலும், அச்சாபீசில் நேரும் வேலைத் தவக்கத்தால் எனது வருகைச் சிறிது காலதாமத மாகின்றது. இதனால் என்னை வளர்க்கும் உங்கள் மனமும் சிறிது மயங்குகின்றது.

அன்றியும் நான் மாத மொருமுறை உங்களைச் சந்தித்து உற்சாகங் கொடுப்பது (ஊமையன் கண்ட கனவிற்குச் சமமாகின்றது) இன்று நடப்பதை நாளை மறக்கும் இயல்பான மனோசக்தியுள்ள நமது மாய மானுடப் பிறப்பில், கண்ணாரக் காண்பதுவே சாக்ஷி. கருத்தாழ்ந்து நினைப்பதுவே வாழ்க்கை. காலத்திற் செய்வதுவே காரியம். கைப்பிடித்து நடப்பதே முன்னேற்றம். என்று நமது பாரதமாதின் சகோதரர்கள் பலர் முந்தினேம் முந்தினேம் எனப் பந்தயங்கட்டி ஓடும்இந் நாகரீகக் கலியுக நவீன ஓட்டத்தில் நாமுங் கலந்து முன்னேடி நிற்பதற்கு வழிகாட்டி எனப் பிறந்த எனது வருகை மாத மிருமுறையாகுமானால், மயங்கிமாறும் உங்கள்மனோசக்தியானது, தயங்கிவிடாது முதிர்ந்து நிற்கும் என்பது உங்களில் அநேகருடைய மனோவபிப்பிராயம். இதுவே என்னதிபரின் நோக்கம். இதை முடிவு செய்வதே எனது வேலை.

ஆகவே, வேற்றாபீசில் நான் வெளிவரும் வேலை காலதாமதமாவதைக்க கருதியும், இருமுறையாக வெளியிட வேண்டுமென்ற ஆசை மேலீட்டாலும், நான் அச்சாகி வெளி வருவதற்குச் சொந்தமாக அச்சுக்கூடம் ஸ்தாபிக்கவேண்டி அதற்குரிய அச்சுச் சாமான்களையும் எனது அதிபர் கிரயத்திற்கு வாங்கிவிட்டார் என்ற எனது சந்தோஷத்தை அபிமானிகளாகிய உங்களுக்குத் தெரிவிக்கின்றேன்.

ஆனால் இன்னுஞ் சில சாமான்கள் புதிதாக வாங்க வேண்டும். பின் கவர்ன்மெண்ட் டிக்ளரேஷன் (ஆர்டர்) வாங்கவேண்டும். ஆகஇவ்வளவு வேலைக்கும் எனக்குரிய மூலதனங் காணாது. குல நலாபிவிருத்திக்குக் கொடுத்துதவும் நமது கோடீசுரப்பிரபுக்களையும், தயாளகுண சந்தாதாரர்களையும், நான் கேட்கும் விண்ணப்பமாவது,—



இப்போதிருக்கும் சந்தாதாரர் ஒவ்வொருவரும், தங்கள் தங்கள் சுவியா முயற்சியினால், ஒவ்வொரு புதுச் சந்தாதாரர்களைச் சேர்த்துதவுவதுடன், தத்தமக் கியன்ற தனசகாயம் செய்யவேண்டும். இதுவரை முன்வந்த எனது போஷகப் பிரபுக்களைப்போல், மற்றுமுள்ள தனேஸ்வரர்களும் எனது போஷகராகச் சேரவேண்டும். இவ்வளவு பேருபகாரம் புரிவீர்களாகில் சீக்கிரத்தில் எனது வருகை மாத மிருமுறையாகும். விரைவில் வேலை நடப்பதற்கு அச்சுக்கூடமும் ஸ்தாபனமாகி நிலையாக நின்றுவிடும். செய்வன திருந்தச் செய் என்றபடி பின் நாம் செய்யுங் காரியங்கட்கும் என் மூலம் அநேகவித நன்மைகளுக் கிடமுண்டாகும். நீங்கள் கொடுக்கும் உற்சாகத்தினால், அதிபர் முயற்சி மென்மேலும் அதிகரிக்கும். ஆகவே கன தனவான்கள் சகலரும் எனது விண்ணப்பத்தை நிறைவேற்றி எனது சந்தோஷத்தைக் கொண்டாட வேண்டுகின்றேன்.

எனக்காக நேமிக்குஞ் சொந்த அச்சுக்கூடத்திற்கு மனோற்சாகத்துடன் மனமுவந்துதவிய குலாபிமானிகளின் :—

## நன்கொடை வரவு.

அருப்புக் கோட்டையில், கண்ட்ரோல் அரிசி சப்ளை செய்பவரும், ஆப்காரி ஏஜண்டும், சப்ஜெயில் கண்டிராக்டருமான, ம-ா-ா-ஸ்ரீ அ. ரா. ம. முருகேச பாண்டியர் வரவு ரூ. 56—0 3.

ஷையூர், ம-ா-ா-ஸ்ரீ, செ. ப. வெயிலு முத்து நாடார் வரவு ரூ. 6—6—6.

இனிவரும் நன்கொடை வரவுகளை அடுத்த முறை வெளியிடப்படும்.

மித்திரன்.

நாடார்குல மித்திரன்.

சித்தார்த்தி௵ தைமீ

## இலங்கை நாடார்கள் வர்த்தகம்.

சரித்திர சம்மந்தமாய் பலவான்கள் பல்லாயிர வருடங்களாக அரசாக்ஷிசெய்துவந்த, இலங்கை எனுந்தீவில் பலபாகங்கள் கடலில் ஆழப்பட்டு, இப்போது விளங்குஞ் சிறுதீவிற்குக் கொளும்புமா நகரமே, வர்த்தக ஸ்தானத்தில் சிறந்து விளங்குகின்றது. வெகுவாய்

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection


அங்கு பாக்கு, ரப்பர், காப்பி, தேயிலை, கொக்கோ, கொப்பறை முதலிய பல வியாபாரங்கள், விசேஷித்திருந்தாலும், அரிசி, கோதுமை, வெங்காயம், வத்தல் முதலிய உணவுப் பொருட் சாமான்கள் பலதையும் இந்தியாவிலிருந்தே பெறவேண்டியதா யிருக்கிறது. இதன் காரணமாக ஆங்குள்ள பலவித சாமான்களுக்கு, இந்தியாவைப் பார்க்கினும் அதிகமான கிராக்கியுண்டு. இந்தியாவிலிருந்து ஏதாவது ஒரு வியாபாரவஸ்து அங்குபோய்ச் சேரச் சிறிது காலதாமத மானால், மிகுதியாக அங்குள்ள கையிருப்பு வியாபாரச் சரக்குகள் ஒட்டிக் கிரட்டியாகவிலையேறி விடுகின்றன.

அன்னிய நாட்டுக் கம்பெனி வியாபாரங்கள் பெரும்பாலும், மகம்மதியர்களிடமும் தென்னாட்டு வேளாளர் கைவசமும் யிருந்து வருகின்றது. அவர்களில் அநேகர் குபேர சம்பத்துடையவர்களாய் விளங்குகின்றார்கள். ஆனால் நமது நாடார் குலத்தினரில், வெகுஜனங்கள் அங்கிருந்தும் பிரபல வியாபாரிகளும் பிரபுக்களுமாயுள்ளவர்கள் அநேகரிருப்பதாகத் தெரியவில்லை. இதற்குப் பல காரணங்களுண்டு. அதாவது இந்தியாவிலிருந்து பாக்கு வியாபாரஞ் செய்யப்போகின்றவர்கள், 5, 6. மாதகால மங்கிருந்து தத்தம் செல்வ நிலைமைக்குத் தக்கவாறு ஷை வியாபாரங்களைக் கொள்ளுமுதல் செய்துகொண்டு இந்தியாவிற்குத் திரும்பி வந்துவிடுகின்றனர். செய்பவர்கள் அவ்விடத்தில ஸ்திரமாயிருந்து, மேற்கொண்டு வேண்டிய வியாபாரங்கள் உண்டாவென்றும், இந்தியாவிலிந்து தருவிக்கக்கூடிய வியாபாரங்கள் எது வென்றும் கவனிப்பதில்லை. மேலும் வர்த்தகர்களே நேரில்செல்வதுமில்லை. இந்திய வர்த்தகரிடம் பவர்பெற்ற ஏஜண்டுகளே செல்வதுவழக்கமா யிருக்கிறது. அப்படிச் செல்பவர்களும் ஓர் எல்லையைக் குறித்துக்கொண்டு போகிறவர்களா யிருப்பதால், அவர்கள் மனதைப் பூராவும பாக்கு வியாபாரத்திலேயே செலுத்திவிடுகின்றனர். அவர்கள் கடமை எதுவோ? அதை எமமட்டு நிறைவேற்றலாமோ? அம்மட்டும அதை முடித்துவிட்டு திரும்பி விடுகின்றார்கள். ஒருவருஷகாலமாக இரண்டொரு கடைகள ஸதிரமாக யேற்பட்டு, இதர வியாபாரங்களைக் கவனிதது வந்தமட்டும, நலல பலனை அடைந் திருப்பதாகத் தெரிகின்றது. ஆயினும் அவர்கள் இநதியாவிலிருந்து தருவிக்கும் உணவுப்பொருள்களை சரிவரக் கவனித்திருப்பதாகத் தெரியவில்லை.

இது நிற்க இலங்கையிலேயே சாஸ்வதமாக வசித்துவரும் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள நாடார் குலத்தினராவது இதுவரையும் இந்திய வியாபாரங்களிற் கவனஞ் செலுத்தியதாகத் தெரியவில்லை. இப்போது நடந்த யுத்தத்தினால் உலகம் விழித்துக் கொண்டதி லிருந்தும், பண்டமாற்றலில் உண்டாகும் பாகுபாடுகளைக் கண்டும், அங்குள்ள நாடார்களுக்குள் கூட்டுறவு வர்த்தக சாலையொன்று, ஏற்பாடு செய்யத்தக்க ஆலோசனையுடன், அவ்வூர் பெரிய வர்த்தகர், கனம் சி. பொ, ம. பொன்னையா நாடாரவர்கள் அது சம்மந்தமாக ஓர் விஞ்ஞாபனப் பத்திரந் தயாரித்து பலருக்கும் விநியோகஞ் செய்யப்பட்டு வருவதாக அறிகின்றோம். நமது பார்வைக்கும் ஓர் பத்திரம் வந்திருக்கின்றது. அதில்கண்டிருக்குங் கருத்தின் சுருக்கமாவது:—

பங்கு ஒன்றுக்கு பத்து ரூபாய் வீதம் இருபதினாயிரம் பங்கு, இரண்டு லக்ஷம் ரூபாய் மூலதனத்தின்பேரில், கொழும்பில் ஒருவர்த்தகசாலை யுண்டாக்கி, அங்கிருந்து யேற்றுமதி செய்யக்கூடிய வியாபாரங்களைக் கொள்முதல் செய்தும், அங்கு வேண்டிய வியாபாரங்களை வெளிநாட்டிலிருந்து கொண்டுவந்து வித்து முதல், செய்யவேண்டுமென்பதே!

இது ஒரு முக்கியமான காரியமே. இதனால் நாடார்களுக்குப் பலவித நன்மைகளுண்டு. அதாவது யேழைகள்முதல் பணக்காரர் வரையும் அவரவர்கள் சக்திக்கேற்றபடி பங்கெடுத்துக் கொள்ளலாம். கம்பெனி ரிஜிஸ்தர் செய்வதால் அதைரியப்படவும் வேண்டியதில்லை. நம்மவருள் பெரும்பாலும் அநேகர் வியாபாரிகளாக யிருப்பதினால் வியாபார விருத்திக்கும் இடமுண்டாகும். இந்தியாவிலிருந்து யேற்றுமதி செய்கிற வியாபாரங்கள் நம்முடைய கைவசமே யிருக்கின்றது. அதனால் அடையக்கூடிய லாபமனைத்தும் நாமே அடையலாம். இங்கிருந்து யேற்றுமதி செய்கிற வியாபாரத்திற்குப் பதிலாக அங்கிருந்து பற்பல வியாபாரங்கள் தருவிக்கவும் யேதுகரம் உண்டாகும். வியாபார விஷயங்கள் அதிகமாகத் தெரிந்து கொள்ளவும், பரஸ்பரம் ஒற்றுமையா யிருக்கவும் வெளிநாட்டின் விஷயங்களைத் தெரிந்து கொள்ளவும் மிக்க அநுகூலமா யிருக்கும்.

தற்காலம் ஒருவர் தனித்துச் செய்கின்ற வியாபாரத்தைவிட பலபேர்கள் ஒன்றுகூடிச் செய்கின்ற வியாபாரமே மேன்மையானது. இம்முறை மேனாட்டினருக்குள் வெகு விசாலமாய்ப் பரவியிருப் பதி

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

னுல்தான், உலகத்தையே விலைக்கு வாங்கி விட்டார்கள். நாமு பழைய வழக்கங்களைவிடப் பிரியமில்லாதவரா யிருந்தாலும், நன்மை யிருக்கிறதென்ற ஒரு விஷயத்தில் கலந்து சிலகாலமாவது பரிக்ஷித் துப் பார்க்கவேண்டிய தவசியம். 23-1-20-ல் தூத்துக்குடி காரப்பேட் டையில் ஐக்கிய நாடார் சங்கம் வருஷப் பூர்த்தியில், தலைமைவகித்த "நாடார் மகாஜன சங்கம்" மானேஜர் கனம் P. பழனிவேல் நாடார் B. A. அவர்கள் முகவுரையில் வர்த்தக விஷயமாய்க் கீழ்க்கண்ட விதம் சொல்லி யிருக்கின்றார்,

"நாடார்கள் அநேகர் வியாபாரத்தில் சிறந்து விளங்குகின்றார் கள். இந்தியாவில் மாத்திரமல்ல, மற்ற வெளிநாடுகளிலும் வர்த்தகஞ் செய்கின்றார்கள். இவர்களது தைரியமும் முயற்சியும் ஊக்கமும் வியக்கத்தக்கதே. ஆயினும் தனித்தனியே வியாபாரம் செய்கின்றார் களே யொழிய கூட்டுத்தொழிலை இன்னும் அநுசரிக்கவில்லை. உள் நாட்டு வியாபாரம்தான் இவர்கள் செய்கின்றார்கள். அந்நிய நாட்டின ரோடு நேராக மொத்த வியாபாரம் செய்வதில்லை. இதற்குக் காரண மென்ன? வியாபாரக் கல்வியும் கூட்டுத்தொழிலு மின்மையே. வியா பாரக் கல்விகற்று கூட்டுத் தொழில்கள் செய்தால், ஆயிரக் கணக்கான நம் வாலிபர்கட்கு தொழில் உண்டுபண்ணுவதோடு, பார்சியர்களையும் ஐரோப்பியர்களையும், வியாபாரப் போட்டியில் வென்று விடலாம்."

இவ்விஷயத்தை கவனித்துப் படிப்பவர்கட்கு உண்மை நன்கு விளங்கும். ஆகவே இந்தியாவில் உள்ள எல்லா வர்த்தக நாடார்களும் ஆங்காங்கு கூட்டங்கூடி ஆலோசித்து அவரவர்கள் தகுதிக்குத் தக்க பங்குகள் சேர்த்துக் கொடுத்து, இலங்கை நாடார்களை, உற்சாகப் படுத்தி, அவர்கள் பத்திரத்திற கண்டபிரகாரம், ஆங்காங்கு டைரக் டர்கள் நியமித்து, கம்பெனியை ரிஜிஸ்டர் செய்து, நடத்திவைத்தால் இந்தியாவிற்கும், இலங்கைக்கும், யேற்றுமதி இறக்குமதி செய்யும் வியாபாரங்கள், பலவற்றில் கிடைக்கும் நல்லலாபம், நம்மையே சேர்ந்து விடுவதோடு இங்கிலாந்து ஜப்பான் முதலிய, அந்நியதேச வியாபாரிகளுடனும், எல்லா வியாபாரமும் நேர்முகமாய்ச் செய்து கொள்வதற்குள் வியாபாரச் சக்தி, ஷை கம்பெனிக்குக் கிடைத்து விடுமென்பதை நாம்சொல்ல வேண்டியதில்லை முயற்சி திருவினை யாக்கும்.

பத்திராதிபர்.



## தூத்துக்குடி.

1920-ஆம் ஜனவரி-மீ 23-உக்கு சித்தார்த்தி-ஆம் தை-மீ 10-உ யன்று, "தூத்துக்குடி நாடார் ஐக்கிய சங்கம்" முதலாவது வருட நிறைவு விழாவில் அக்கிராசனம் வகித்த நாடார் மஹாஜன சங்கம் மானேஜர் ம-ா-ா-ஸ்ரீ P. பழனிவேல் நாடார் B.A., அவர்கள்செய்த உபந்நியாசம்.

## நாடார்களின் தற்கால நிலைமை.

நமது தற்கால நிலைமையை ஆராய்வதற்குமுன், நமது முற்கால நிலைமையை யறிதல் அவசியம். நமது பூர்வீகச் சரித்திரம் தான், நாம்முன்னேற்ற மடைந்திருக்கின்றோமா? அல்லது பின்னடைந்திருக்கி றோமாவென் றறிவதற்கு முக்கிய ஆதாரம். தவிரவும், நமது பூர் வீக சரித்திரம் சிறந்ததா யிருப்பின், நம் முன் னேற்றத்திற்கு ஒரு வழிகாட்டியா யிருந்து, நமக்குத் தைரியத்தையும், ஊக்கத்தையும் கொடுக்கும்.

க்ஷத்திரியர். ஐரோப்பியர் நமது தேசத்தில் அடிவைப்பதற்கு முன் நமது தேசம் எந்நிலைமையி லிருந்ததென்று அறிவதற்குத் திட மான சரித்திரங்கள் ஏற்படவில்லை. நமது தேச நடவடிக்கைகள் ஒழுங்காய் வரையப் பட்டுப் பாதுகாக்கப் படவுமில்லை. வேதம், இதிகாசம், புராணம், சிலாலிகிதம், பூர்வ நாணயங்கள், வழக்கம் முதலிய வற்றை ஆராய்ந்து, நமது தேச சரித்திரம் இவ்வாறு இருக்கவேணு மென்று யூகித் தெழுதப்பட் டிருக்கிறது. நமது தேச சரித்திரம் எழுதுவதற்கு புராண காவியங்கள் முக்கிய ஆதாரமா யிருக்கையில், நம்மைப்போன்ற ஒரு குலத்தவாது சரித்திரத்தை ஆராய்வதற்கு இவற்றினும் சிறந்த ஆதாரங்கள் கிடைக்கமாட்டாவென்பது நிச்சயம். நமதுகுல வரலாற்றைப் பற்றி, நாசரேத்துக் கடுத்த பிரகாச புரவாசி யான சட்டாம் பிள்ளை ஐயா அவர்களும் அவர்களுக்குப் பின் அவர் கள் குமாரர் ஏ. பி. குல சேகரராஜ் அவர்களும், சென்னை வாசியான விஜய துரைசாமி கிராமணியவர்களும், வெகு சிரமப்பட்டு, தமிழ், தெலுங்கு, இங்கிலீஷ், சமஸ்கிருதம், பாலி முதலிய பாஷைகளிலுள்ள கிரந்தங்களைப் பரிசோதித்து, ராஜ் அவர்கள் "நாடார் குல வரலாறு" என்னும் நூலையும், கிராமணியவர்கள் "ஆரிய க்ஷத்திரிய குல விளக் கம்" என்னும் நூலையும் வெளியிட்டிருக்கின்றனர். இவர்களது குலாபிமானம் மெச்சத் தக்கது. இந்நூல்களின் கூற்றுத்தப்பென்று ஸ்தாபிக்கப்படும் வரையில் அவற்றை நம்புவதே நியாயம்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

இவர்களிருவரும் நாம் ஆரிய க்ஷத்திரியரென்றே பல ஆதாரங்களைக்கொண்டு ஸ்தாபிக்கின்றனர். 'சான்றோர்' என்னும் வார்த்தையானது 'சான்று' எனும் தமிழ்மொழியாய்ப் பிறந்து சூரிய குலத்தவரெனப் பொருள் படுகிறதென்று கிராமணியவர்களும், சந்திரகுலத்தினரைக் குறிக்கும் 'சாந்திரர்' என்ற வடமொழி 'சான்றோர்' என மாறிற்றென்று ராஜ் அவர்களும் சாற்றுகின்றனர். இப்பதவுரை எவ்வாறிருப்பினும், நாம் க்ஷத்திரியர் என்பதற்கு இரண்டு முக்கிய ஆதாரங்கள் இருச்கின்றன.

(1) சைவ புராணங்களுள் சிறந்து விளங்கும் பெரிய புராணத்தில் கூறப்படும் பக்தர்கள் அறுபத்து மூவருள் ஒருவரான ஏனாதிநாத நாயனார் சான்றார் குலத்தவரென்று அப்புராண கர்த்தாவாகிய சேக்கிழார் கூறுகின்றனர். இந்த ஏனாதிநாத நாயனார் நம் குலத்தவரேயென்று சைவ சித்தாந்திகளெல்லாம் ஒப்புக்கொள்ளுகிறார்கள். வடமொழியில் பக்த விலாசம் எழுதின உபமன்னியர் இவரை "சாக்ஷி குலோத்பவ" எனவும், சேக்கிழார் இவரை "ஈழகுலச் சான்றோர்" எனவும் கூறியுள்ளார். இவற்றான் இவர் ஆரிய க்ஷத்திரியரென்று விளங்குகிறது.

(2) அத்துவைத மார்க்கத் தலைவரான சங்கராச்சாரிய சுவாமிகள் ஒருகாலத்தில் விடுத்த ஸ்ரீமுகத்தில் "நாடாக்கள் க்ஷத்திரியாள்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

'மூன்று' எனும் பதம் மூணு என வழங்கப்படுவதுபோல, சான்றோர் அல்லது சான்றார் என்னும் பதம் சாணார் என்றாயிற்று. 'சான்றார்' என்பதும் 'சாணார்' என்பதும் வெவ்வேறு வகுப்பினரைக் குறிக்கும் பதங்களல்ல.

(1) தெலுங்கு பாஷையில் நம்குலத்தினரைக் குறிக்கும் பதமே கிடையாது. ஆனால் விஜயநகர் நாய்க்க வம்சத்தினராகிய தென்னாட்டு நாய்க்கர் நம்மை இன்னும் "சான்றவாடு" என்கிறார்கள். இது தெலுங்குப் பதம் அல்ல. சான்றார் என்னும் பதத்தை தமிழ்த் தெலுங்கில் 'சான்றவாடு' என்கிறார்களே தவிர, சாணார் என்னும் பதத்தையல்ல.

(2) ஏனாதிநாத நாயனார் 'சாணார்' என்று தப்பாக அழைக்கப்படும் நம் குலத்தினரென்று சைவர்கள் யாவரும் ஒப்புக்கொள்ளுகிறார்



கள். ஏனாதிநாத நாயனார் சான்றார் குலத்தவரென்று பெரிய புராணம் கூறுகிறது. ஆகையால் சான்றோர் என்னும் பதம் சாணார் எனக் குறுகிற்றென்பதற்குச் சந்தேகமில்லை.

நாடார். நாடார் என்பது நம் குலப்பட்டப் பெயர். இது குலப்பெயர் அல்ல. காரணப் பெயர் 'நாடாண்டார்' அல்லது நாட்டார், (அதாவது, நாட்டையுடையவர், அரசரெனப் பொருள்படும்) என்பது குறுகியது. இதனால் நாம் அரசகுலத்தவரென்பது தெளிவாகிறது.

இக்காரணங்கள்பற்றி, நாம் க்ஷத்திரிய வம்சத்தினராகிய அரசகுலத்தவரென்பது தெளிவு.

குலத்தொழில். பெரிய புராணமும் அதிலடங்கிய ஏனாதிநாத நாயனார் திவ்விய சரித்திரமும் இல்லையாயின் நம் குலத்தைப் பற்றிய விவரம் நமக்குக் கிடைப்பதரிது.

(1) பெரிய புராணத்துக்கு முதல் நூலாகிய பக்த விலாசத்தில், ஏனாதிநாத நாயனாரைக் குறித்துக் கூறுமிடத்து (1) 'ஸஸ்த்ர கலாச்சாரிய' எனவும், (2) 'குலக்கர்ம சமுத்பந்நவ்ருத்தி' எனவும் விரிக்கப்பட்டிருக்கிறது.

(2) பெரிய புராணத்தில் (1) வாட்படை பயிற்றுந் தன்மைத் தொழில் விஞ்சையிற் றலைமை சார்ந்துள்ளார் எனவும் (2) 'தள்ளாத் தங்கள் தொழிலுரிமைத்தாயத்திலுள்ளா னதிசூரன்' (3) வாட்சுற்றத்தார் எனவும் சொல்லப்பட்டிருக்கிறது.

இவற்றான் ஏனாதிநாத நாயனார் குலத்தவரது தொழில் இராணுவத்தொழில் என நன்கு விளங்குகிறது.

கஷ்டநிலைமை. மேற்கூறிய க்ஷத்திரிய வம்சத்தினரே பாண்டிய நாட்டை யாண்ட பாண்டிய மன்னரென்றும், இப் பாண்டிய மன்னர் அரசுபுரிந்த காலத்திலே தான் நமக்கு 'நாடார்'என்ற பட்டம் ஏற்பட்டதென்றும், பாண்டிய நாட்டைக் கைப்பற்றிய விஜயநகர நாய்க்க அரசர் காலத்தில், ஷை நாய்க்கர்களாலும், நமது ஆட்சிக் குட்பட்டிருந்த ஏனைய வகுப்பினராலும் துன்புறுத்தப்பட்டு, புதிய மன்னனின் கொடுமையைச் சகிக்க முடியாமல் தலைநகரையும் பெரிய பட்டணங்களையும் துறந்து, காட்டுக்குள் சென்று கிராமங்களை யுண்டுபண்ணி, காலத்தைக்

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

சேற்ப விவசாயம் வியாபாரம் முதலிய நூதனத் தொழில்களை ய
சரித்தார்க ளென்றும், நாய்க்கர் அரசாட்சிமாறி, முசம்மதியரு
பிறகு ஆங்கிலேயரும் தென்னாட்டைக் கைப்பற்றின காலத்தில், ந
மை வருத்தி வந்தவாறு ஆதிக்கமும் அதிகாரமும் தொலையவே, நம
கஷ்டங்கள் ஒருவாறு நீங்கினவெனவும், நம்மேல் ஏற்பட்ட துவேஷ
முற்றிலே மாறவில்லை யென்றும் சொல்லப்படுகிறது.

ஆங்கிலேய பிரபுத்துவத்தின் கீழ் சமமான அந்தஸ்தையடைந்
நமது விடாமுயற்சியாலும், ரோஷத்தாலும் நாளுக்கு நாள் முன்னே
றிக் கொண்டே வந்திருக்கிறோம். நமது முன்னேற்றத்தையும், ஆதி
க்கத்தையும், செல்வாக்கையும் கண்ணுற்றுப் பொறாமைகொண்டு, சி
ஜாதியார் நம்மை அடிக்கடி கஷ்டத்துக் குள்ளாக்கிக் கொண்டிரு
கிறார்கள்.

ஆனால், நமது தேச நிலைமையின் மாறுபாட்டாலும், பிரிட்டி
இராஜாங்கத்தாரது நடுவு நிலைமையாலும், நமது ஊக்கத்தாலு
இதரகுலச் சகோதரர்களின் பெருந் தன்மையாலும் நாம் அடைந்
வந்த கஷ்டங்கள் பெரும்பாலும் நீங்கின. இப்போது தேசமுழுவது
ஓர் நூதன சக்தி வியாபித்திருப்பதாலும், நம் தேசத்தவருக்கு
ஓர் புதிய உணர்ச்சி தோன்றி யிருப்பதாலும், ஏனைய குணங்களெ
லாம் வெகு சீக்கிரத்தில் நீங்கி விடுமென்று நம்புவதற்கு அநேக ஏது
கள் தோன்றுகின்றன.

என்றாலும் புதிய உணர்ச்சி பரவாத கிராமாந்தரங்களில் சி
விடங்களில் நம்மவர் இன்னும் சில கஷ்டங்களை யனுபவித்து வரு
றார்கள். அவற்றை நிவர்த்தி செய்வது நமது கடமை.

இதுவரையில், நமது பூர்வீகச் சிறப்பையும், மத்தியில் நா
பட்ட பாட்டையும் கூறினேன். நமது பூர்வீக மேன்மை இப்போ
யாதொரு பிரயோசனத்தையும் தரத் தக்கதல்ல. நாம் அரசகுலத்
வர் என்று சொல்லித் தூங்கிக் கொண்டிருந்தால் நம்மை நாமேதா
மதித்துக் கொள்ளவேணும். நமது பூர்வீகச் சரிதத்தை நமக்குவ
காட்டியாய் மாத்திரம் வைத்துக்கொண்டு, தற்காலத்துக் கேற்றவா
விருத்திபொருந்த முயலல் வேண்டும். நாம் இவ்வளவுதூரம் மு
னேறி விட்டோமே யென்று இறுமாப்படையக் கூடாது. நம்மை
சூழ்ந்திருப்பவர், நமது தேசப்பந்தய ஓட்டத்தில், எவ்வளவுதூ



முன்சென் றிருக்கிறார்க ளென்பதை, கண்ணைத் திறந்துபார்த்து, நாமும் அவர்களோடு கலந்து கொள்ளவேண்டும். இல்லையாயின் தாழ்வடைந்து விடுவோம். ஆகையால் நமது தற்கால நிலைமை எப்படியிருக்கிறதென்று ஆராய்வோம்.

தற்கால நிலைமை. பட்டணங்களி லானாலும் சரி, கிராமங்களி லானாலும் சரி, நாடார்களின் நடையுடை பாவனைகளையும், அவர்களைப் பார்க்கிலும் உயர்ந்தவர்களென்று தப்பட்டை யடித்துத் திரியும் இதர குலத்தினரின் நடையுடை பாவனைகளையும் கவனித்து வந்திருக்கிறேன். நான் சென்ற விடங்களிலெல்லாம், நம் குலத்தவர் எத்தொழில் செய்து கொண்டிருந்த போதிலும், அவர்களைச் சுற்றிவசிக்கும் உயர்குலத் தோரெனப் படுவரைப் பார்க்கிலும் எவ்விஷயத்தில் தாழ்ந்தவர்களென்று கண்டுபிடிக்க முயல்வதே என் முக்கிய கருத்து. நானறிந்த மட்டிலும், உயர்குலத்தா ரெனப்படும் அநேக ஜாதியாரைப் பார்க்கிலும், நம் குலத்தவர் எவ்விஷயத்திலும் தாழ்ந்தவர்களல்ல,

நமது பூர்வோத்திரமும், சரித்திரமும், தெரியாமல், சிலர் தப்பபிப்பிராயங் கொண்டு நம்மைக் கேவலமாய்க் கூறுகிறார்கள். இப்பேர்ப் பட்டவர்களில் அநேகர் கவர்ன்மெணடு உத்தியோகத்தி லிருப்பதால், தங்கள் அபிப்பிராயத்தை கவர்ன்மெண்டு கெஜட்களிலும் கூட நுழைத்து விடுகிறார்கள். இக் கண்மூடிகளின் வார்த்தையை தீங்கற்ற ஐரோப்பியர்களும் கூட நம்பி மோசம் போகிறார்கள், இப்பேர்ப்பட்ட துவேஷிகளுக்கு உயர்ந்த உத்தியோகங்கள் கிடைத்தால் நமது தேசம் உடனே க்ஷேம மடைந்துவிடும்.

1916-ம் ௵ டிசம்பர்மாதத்தில் மதராஸ் ரிவினியூபோர்டு ஆபீஸிலிருந்து பிறந்த கல்விவிர்த்தி விஷயமான சர்க்குலரிலும், 1918-ம் ௵ கவர்ன்மெண்டாரால் பிரசுரமாகி யிருக்கும் திருநெல்வேலி டிஸ்டிரிக்ட் கெஜட்டீயர் புஸ்தகத்திலும் நம்மை தீட்பாயெழுதி வகுப்பேற்படுத்தி யிருக்கின்றது, இதற்குக் காரணம் மேற்கூறிய இந்திய உத்தியோகஸ்தர்களே.

நம்மைத் தாழ்த்திக் கூறுவோர் ஒரு பெரிய தப்பிதம் செய்கிறார்கள், இயற்கையிலேயே நம்மீது துவேஷம் நிறைந்தவர்கள். நம்மவரைப் பார்க்கும்போது இத் துவேஷமானது இவர்களின் கண்ணை மறைத்துவிடுகிறது, புத்தியையும் சிதறடித்து விடுகிறது. எங்கேயோ

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

கல்வி வாசனையறியாத சில நாடார்கள் தரித்திர திசையினால் அசுத்தமாயிருந்தால், 10-லக்ஷம் நாடார்களும் அசுத்தர்களென்று கூறலாமா? பிராமணரில் சிலர் மாமிசம் தின்றால், பிராமணர்களெல்லாம் மாமிசம் தின்பவர்களென்னலாமா? ஐய்யங்கார் ஒருவர் சாராயம் குடித்துத் தெருவில் புரண்டால் ஐயங்கார்களெல்லாம் குடிகாரர், என்னலாமா? எக்குலத்தினராயினும் தரித்திர திசையிலிருந்தால் அசுத்தமாய்தான் இருப்பார்கள். உத்தியோகம் செய்யும் பிராமணர் ஒருவரை வயலை உழச்சொன்னால் அவர் வஸ்திரம் வெண்மையாயிருக்குமோ? சைவர் ஒருவர் ரெயிலில் Fireman வேலை செய்தால், அவர் உடைகறுமையடையாதோ?

இக்கண்மூடிகள் இன்னும் ஒரு தப்பிதம் செய்கிறார்கள். ஒரு கிராமத்திலிருக்கும் நாடாரை இன்னொரு கிராமத்திலிருக்கும் இதர ஜாதியாரோடு ஒப்பிடுகிறார்கள். இது முழுப்பிசகு, ஒரே கிராமத்தில் வசிக்கும் நாடார்களையும், உயர்ந்தோரெனப்படும் இதர குலத்தினரையுமல்லவா ஒப்பிட்டுப் பார்க்கவேணும், இப்படிச் செய்வார்களானால் தங்கள் தப்பபிப்பிராயத்தை உடனே மாற்றிக்கொள்வர்.

மஞ்சக் காமாலை பூத்தகண்ணுடையவராயிருந்தால் நாம் என் செய்வோம். உண்மையைக் கண்ணால் பார்த்தும் பொய்யுரையாடுபவர்விழி கண்குருடர்களே.

கௌபீனதாரியாய் வயலில் உழுதுகொண்டிருக்கும் ஒரு புருஷனையும், தலையில் கூடைவைத்துக்கொண்டு தெருவில் செல்லும் ஒரு கூலிப் பெண்ணையும் புகைப்படம் பிடித்து, இவர்கள்தான் இந்தியர்களென்று ஐரோப்பாவுக் கனுப்பிய பாதிரிமார்களைப்போன்றவரே இக்கண்மூடிகள்.

ஜனத்தொகை. சிற்றரச நாடுகள் நீங்கலாக சென்னை ராஜதானியில் மாத்திரம், 1911ஞூ வருஷத்திய 'சென்ஸஸ்' ரிப்போர்ட்படி, சுமார் 7-லக்ஷம் நாடார்களிருக்கின்றனர். சிற்றரசநாடுகளிலும் சென்னைக்கு வெளியிலும் இருப்பவர்களையும் சேர்த்தால் 10-லக்ஷத்துச்குக் குறையாது. சென்னை ராஜதானியில் 11-ஜில்லாக்களில் மாத்திரம் நாடார்கள் ஏராளமாயிருக்கின்றனர்.



ஜனத் தொகை விவரம்:—

| | | |
|---|---|---|
| 1. | திருநெல்வேலி ... ... | 271,209 |
| 2. | இராமநாதபுரம் ... ... | 106,200 |
| 3. | கோயம்புத்தூர் ... ... | 76,907 |
| 4. | சேலம் ... ... | 42,695 |
| 5. | தஞ்சாவூர் ... ... | 37,655 |
| 6. | மதுரை ... ... | 31,738 |
| 7. | செங்கல்பட்டு ... ... | 22331 |
| 8. | வட ஆற்காடு ... ... | 16,116 |
| 9. | தென் ஆற்காடு ... ... | 14,426 |
| 10. | திருச்சினாப்பள்ளி ... ... | 12,812 |
| 11. | மதராஸ் ... ... | 7716 |
| 12. | புதுக்கோட்டை ... ... | 1856 |

திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம் இம்மூன்று ஜில்லாக்களிலும் 4-லக்ஷத்துக்கதிகம் இருக்கிறார்கள்,

தற்காலதொழில். நாடார்குலத்தவரது 'குலக்கர்மம்' 'தன்மைத் தொழில்' அதாவது குலத்தொழில் இராணுவத் தொழிலென்று முன்னரே எடுத்துரைத்தேன். நாட்டையிழந்தபின் வேறுதொழில்களை அனுஷ்டிக்கத் தொடங்கினர் என்றும் கூறினேன்.

தற்கால தொழிலையறிவதற்கு முக்கிய ஆதாரம் கவர்ன்மெண்டால் 10-வருஷத்துக் கொருமுறை தயாரிக்கப்பட்டுவருகிற 'சென்ஸஸ்'ரிப்போர்ட்டே. சென்ஸஸ் ரிப்போர்ட்டர்களின் அதிக்கிரமம்,இச் சென்ஸஸ் ரிப்போர்ட்டர்களின் செயலைக் கவனியுங்கள் 1911ஞூ வருஷத்தில் கணக்கெடுக்கும சமயத்தில், நாடார்களை "சான்றோர் குலநாடார்கள்" என்று எழுதவேணுமென்று நமது நாடார் மஹாஜனசங்கம் பிரஸிடெண்டவர்களும் கவர்ன்மெண்டுக்குத் தெரியப் படுத்தியதோடு நாடார்களெல்லாரும் தங்களை 'சான்றோர்குல நாடார்' என்று எழுதச் சொல்லவேணுமென்றும் துண்டுப் பத்திரிகைகளும் பிரசுரித்தனர்.

இவ்வாறிருக்க, ஜனத்தொகைக் கணக்கெடுத்தவர்கள் பெரும்பான்மையும் நாடாரல்லாதாராயும் துவேஷம் நிறைந்தவர்களாயும் இருந்ததால், கூறியவண்ணம் எழுதாது, தங்களிஷ்டம்போல ஜாதிப் பெயரையும் தொழிலையும் மாறுபடுத்தி எழுதினதாக அநேகர் முறையிட்டனர். சென்ஸஸ் கணக்கெடுப்பவர்கள் பெரிய படிப்பாளிகளல்ல

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

தமிழ்சொஞ்சம் எழுதத்தெரிந்தவர்களை யெல்லாம் Enumereter களாக நியமிப்பது வழக்கம். இவர்களுக்கு லகர ளகரங்களுக்கு ரகர றகரங்களுக்கும் உள்ள வித்தியாசங்கூடத் தெரியாது. இவர்கள் 'மூன்று' என்னும் பதத்தை 'மூணு' என்றும் 'அகமுடையான்' என்னும் பதத்தை 'அகம்படியான்' என்றும் செருமானைச் செம்மன் என்றும் எழுதும் சுபாவமுடையவர். மூணை, மூன்றென்றும், அகம்படியன் என்னும் பதத்தை, அகமுடையானென்றும், செம்மன் என்னும் பதத்தை செருமான்என திருத்தின சென்ஸஸ்குமாஸ்தாக்கள் 'சாணான்' என்பதை 'சான்றான்' என மாற்றுதது சந்தேகத்தை யுண்டுபண்ணுகிறது. மதாறூஸ் சென்ஸஸ் சூப்பிரண்டு மலோனி துரையவர்களும் இதைக் கவனிக்கவில்லை.

ஒருநாளைக்கு எத்தனையோ கையெழுத்துப்போட வேண்டியவர் இதை யெல்லாம் கவனிக்கவும் முடியாது. அவருக்கு அனுப்பின மனுவும் ஞாபகத்துக்கு வராது.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட 'ரிப்போர்ட்' கூறுகிறபடி தொழில் விவரம்:—

| | |
|---|---|
| விவஸாயம் செய்வோர் 1000 க்கு | 520.4 |
| *பதனீர் உற்பத்தி | 139,5 |
| சில்லறைத்தொழில் | 110.3 |
| கைத்தொழில் | 98.4 |
| வர்த்தகம் | 72.6 |
| இதரதொழில் | 58.8 |

இந்த சென்ஸஸ் ரிப்போர்ட்டு வேதவாக்கியமென்று வைத்துக் கொண்டாலும், 1000-க்கு 139-பேர்தான் பதனீர் இறக்கிறவர்கள் இப்பதனீரி லிருந்துதான் பிராமணர்களும் சைவர்களும் பிரியமாய்ச் சாப்பிடும் மதுரமான வெல்லம் செய்யப்படுகிறது. இதில் மாட்டெலும்பும் கழுதையெலும்பும் சேர்ப்பதில்லை. ஜனங்களுக்கு அவசியமான உணவுப் பொருளைக் கொடுக்கும் தொழில் இழிதொழில் எனும் மூடர்கள், அந்நிய நாட்டினின்று சர்க்கரை ஏராளமாய் இறக்குமதியாவதைப் பார்த்துக் கூக்குரலிடுவானேன்.

* இப்பத நீரையே பிராமணர்களும் சைவர்களும் சாப்பிடுகிறார்கள்.



மேற்கூறிய 139-பேர்களில், 'கள்' உற்பத்தி செய்பவர் 100-க்கு 10பேர்கூட இருக்கமாட்டார்கள். ஆகவே, 100-க்கு ஒருவர் 'கள்' உற்பத்தி செய்வதாக வைத்துக் கொள்ளலாம்.

உண்மை இவ்வாறிருக்க, நம் நாட்டினராகிய படித்தோரும், படியாதவரும், விவேகிகளும், அவிவேகிகளும், சென்ஸஸ் ரிப்போர்ட்டைத் தயார் செய்தவர்களும், அதனைப் படித்தவர்களும், நம் குலத் தொழில் 'கள்' உற்பத்தி செய்தல் என்று கூறுவது விசனிக்கத்தக்க விஷயம். இவ்வாறு பிதற்றுவது நம் சகோதரரின் அறிவீனத்தை நன்கு வெளிப்படுத்துகிறது. இந்த அறியாமையை ஒட்டி உண்மையைப் பரவச்செய்ய வேண்டியது நமது முக்கியமான கடைமைகளில் ஒன்று.

'சென்ஸஸ்' ரிப்போர்ட்டுத் தயாரித்த மலோனி துரையவர்கள் நாடார் குலத்தொழில் 'பனையேறுதல்' என்று எழுதி யிருக்கின்றனர் இவருடைய கணக்குப்படி 1000-க்கு 520பேர் விவஸாயமும், 1000 க்கு 139½-பேர் 'பனையேறுதலும் நடத்தி வருகையில், பாதிக்குமேற்பட்டவர்கள் செய்யுந் தொழிலையாவது குலத்தொழில் என்று சொல்லாமல் பத்தில் ஒருபாகத்தினர் செய்யுந் தொழிலைக் குலத்தொழில் என்றது எக்காரணத்தினாலென்று எனக்குத் தோன்றவில்லை. நமது குலத்தொழிலைக் குறிக்கும் நூல்கள் பெரிய புராணம், பத்தவிலாசப் இவற்றைத் தவிர வேறில்லையே. வேறேயாதொரு ஆதாரமும் கிடையாதே. ஒருவேளை திரிகால ஞானத்தினால் கண்டறிந்தனரோ? அல்லது வழியில் போகிறவன் பாடினதைக் கேட்டனரோ? அல்லது தனக்கு உதவியாயிருந்த நம்மீது துவேஷம் கொண்ட குமஸ்தாக்களின் வார்த்தையை நம்பினரோ?

சென்ஸஸ் ரிப்போர்ட்டில் கூறியபடி சில குலத் தொழில்களைப் பார்ப்போம்:—

| ஜாதிகள். | | பெரும்பான்மையோர் தொழில். | குலத்தொழில் |
|---|---|---|---|
| (1) கைக்கோளர் | ... | 538·4 (நெசவு ) | நெசவு. |
| (2) கள்ளர் | ... | 901·8 (விவஸாயம்.) | விவஸாயம். |
| (3) கம்மாளர் | ... | 602·ɹ (உலோகம் மரம்வேலை.) | உலோகப் மரம்வேலை |
| (4) மறவர் | ... | 786·5 (விவஸாயம்.) | விவஸாயம். |

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

| | | |
|---|---|---|
| (5) பிராமணர் ... | 332·2 (நிலச்சுவான்தார்)<br>195·9 (விவஸாயம்.)<br>122·2 (வைதீகம்.) | வைதீகம். |
| (6) நாடார் | 520 (விவஸாய<br>139.5 (மரமேறுதல்) | மரமேறுதல் |
| (7) தீயர் | 436 (வயல்,மரம்வெட்டி)<br>204 (விவஸாயம்)<br>72 (மரமேறுதல்) | மரமேறுதல். |

(I) மேற்கூறிய ஜாப்தாப் பிரகாரம்—கைக்கோளர், கள்ளர், கம்மாளர், மறவர் இவர்களில், பெரும்பான்மையோர் செய்யும் தொழிலேயே அவர்களது குலத் தொழிலாகக் கூறப்பட்டிருக்கிறது.

(II) பிராமணரில் 1000-க்கு 332-பேர் விவஸாயம் செய்யாத சமுசாரிகளாயும் 1856-பேர் விவஸாயம் செய்வோரையும், 122-பேர் வைதிகத்தொழில் புரிபவராயுமிருக்க, அவர்களது குலத்தொழில் 'வைதீகம்' என்று கூறப்பட்டிருக்கிறது. இது பிரம்ம க்ஷத்ரிய வைஸ்ய சூத்திர என்னும் நால்வகை வர்ணாச்சிர தர்மங்களைக் குறிக்கும் மநுநூலை ஆதாரமாகக் கொண்டெழுதியது போலும்.

(III) நாடார்கள் 1000-க்கு 520-பேர் விவஸாயிகளாயிருக்கையில் 1395-பேர் செய்யும் தொழிலை பரம்பரைத் தொழிலெனவும், தீயர்களில் 436-பேர் 'பயிரிடுதல் மரம்வெட்டுதல்' செய்து, 204-பேர் விவஸாயிகளாயிருக்க, 72-பேர் செய்யும் தொழிலை குலத்தொழிலென்றதும் எந்த தர்மசாஸ்திரப்படி? இவ்வித அக்கிரமத்துக்கு கவர்ன்மெண்டார் எவ்வித சமாதானம் கூறுவர்? இது நம்மைத் தாழ்த்த வேணுமென்று நம் பகைவர் செய்த துன்மார்க்கக் காரியமே யல்லால் வேறல்ல. நம் பகைவர்கள் பொய்யர்கள். ஆதிமுதல் சதியாலோசனை செய்து இவ்வாறெழுதி மலோனி துரையவர்களும், இதை நம்பும்படி செய்துவிட்டனர். இக்கொடிய விஷயம் கடுமையாய்க் கண்டிக்கத்தக்கது. சகோதரர்களே! இவ் விஷயக்காரரின் செய்கையை எப்போதாவது கவனித்தீர்களா? இனிமேல் கண்ணை மூடிக்கொண் டிராமல் அடுத்த சென்ஸஸ் ரிப்போர்ட்டில் இப் பொய்யுரை தோன்று வண்ணம் வேலை செய்யுங்கள்.

முன்னேற்ற சாதனங்கள். ஒரு தேசத்தவர் க்ஷேமமடைந்து நாகரீகத்தில் ஓங்கிப் பிரகாசிப்பதற்கு முக்கிய சாதனங்கள் விவஸாயம், கைத்தொழில், வியாபாரம் இம்மூன்றே. இம்மூன்று தொழில்களும் சரியாய் நடப்பதற்கு முக்கிய சாதனம் அறிவு. இவ்வறிவை யூட்டுவது கல்வியே.



விவஸாயம். நம் குலத்தவருள் பாதிக்குமேல் விவஸாயம் செய்பவரென்று முன்னேயே குறிப்பிட் டிருக்கிறேன். இவர்களில் பெரும்பான்மையோர் நிலச்சுவான்தார்கள். இவர்கள் புராதன முறைகளை யனுசரித்து வருகிறார்களே தவிர, நவீன முறைகளை யனுஷ்டிப்பதில்லை. நூதன முறைகளை யனுஷ்டிக்கும் ஐரோப்பிய தேசங்களில் சுமார் 20, வருடங்களுக்கு முன் 1-மடங்கு விளைந்தபூமி இப்போது 4 மடங்கு விளைகிறது. இதற்குக் காரணமென்ன? நவீன சாஸ்திர ஆராய்ச்சி முறையே. கோயம்புத்தூரிலிருக்கும் விவஸாயக் காலேஜுக்குச் சென்று கல்வி பயின்றவர் நம்மில் எத்தனை பேர் உளர்?

இப்போது நமது தேசத்துக்குக் கொடுக்கப்பட்டுள்ள சீர்திருத்த சட்டத்தினால் விவஸாய இலாக்கா ஜன ஆட்சிக்குட்படுத்தப்பட்டிருக்கிறது. இனிமேலாவது நாம் நூதன முறைகளை யனுஷ்டித்து விவஸாயத்தை விருத்திசெய்யும் பாக்கியத்தை யடைவோமாக!

கைத்தொழில்:—நமது தேசத்து விளைபொருள்கள் இங்கிலாந்து முதலிய வெளிதேசங்களுக்கு ஏற்றுமதியாகி, அங்கே நமது தேவைக்குத் தக்கவாறு பல வஸ்துக்களாக மாற்றப்பட்டு, மறுபடியும் புதிய ரூபத்துடன் இங்கேவந்து விற்கப்படுவது நமது வியாபார சகோதரர்களுக்கு நன்றாய்த் தெரியும். பஞ்சு துணியாக மாறுகிறது; பருத்திக் கொட்டை, வேர்கடலை, ஆமணக்கம் வித்து சோப், மெழுகுவர்த்தி, பிஸ்கட், உறம் முதலியனவாய் மாறுகின்றன. தோல் பூட்ஸ், லெதர் பாக், பெல்ட் முதலிய ரூபங்கள் தரிக்கிறது. இவ்வஸ்துக்களெல்லாம் இந்தியாவில் தயாரிக்கப்படுவதாயின், கோடிக்கணக்கான ஜனங்களுக்கு தொழில் ஏற்படுவதுடன் சாமான்களும் சல்லிசான விலைக்கு விற்கலாம். நமது திரவியம் அந்நிய நாட்டுக்குச் செல்வ தொழியும். இங்கிலாந்துமுதலியநாடுகள் இறக்குமதியாகும் சரக்குகளின்பேரில்வரியை ஏற்றி, சொந்தத் தொழிலை விருத்திசெய்து கொண்டன. நமது தேசத்திலோ இவ்வாறு யாதொன்றும் செய்யப்படவில்லை. இதற்கு கவர்ன்மெண்டே காரணம்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

புதிய சட்டத்தின்படி கைத்தொழில் இலாக்காவும் மாற்றப்பட்டுள்ளது. இவ்விலாக்காவில் நமக்குப் பூரண சுதந்தரம் கிடைக்கவில்லையாயினும் விருத்தி செய்வதற்கு சாதனங்களுண்டு. இறக்குமதிச் சரக்குகளின்பேரில் அதிக வரி ஏற்படுத்தவேண்டும். இச்சமயத்தில் அநேக புதிய கம்பேனிகள் உண்டாவதை பத்திரிகை மூலமாய்ப் பார்த்திருக்கலாம். விருதுபட்டி, தூத்துக்குடி, அல்லது கடம்பூரில் ஒரு பெரிய அணி நெய்யும் யந்திரசாலை வைத்து நடத்தலாம். ஜனங்கள் சாத்தியமானமட்டும் சுதேசி விரதத்தைக் கைக்கொண்டு சுதேசத் தொழிலை ஆதரித்தல் அவசியம்.

வியாபாரம்:—நாடார்கள் அநேகர் வியாபாரத்தில் சிறந்து விளங்குகிறார்கள். இந்தியாவின் எல்லாப் பாகங்களிலு மாத்திரமல்ல, வெளிநாடுகளிலும் வர்த்தகம் செய்கின்றனர். இவர்களது தைரியமும், முயற்சியும், ஊக்கமும் வியக்கத்தக்கனவே. ஆயினும், தனித்தனியே வியாபாரம் செய்கிறார்களே தவிர, கூட்டுத் தொழிலை இன்னும் அநுசரிக்கவில்லை. உள்நாட்டு வியாபாரந்தான் இவர்கள் செய்கிறார்கள். அந்நிய தேசங்களோடு நேராய் மொத்த வியாபாரம் செய்வதில்லை. இதற்குக் காரணமென்ன? வியாபாரக் கல்வியும், கூட்டுத் தொழிலும் இன்மையே. வியாபாரக் கல்வி கற்றுக் கூட்டுத் தொழில் செய்தால் ஆயிரக் கணக்கான நம் வாலிபர்களுக்கு தொழில் உண்டு பண்ணுவதோடு, பார்ஸிகளையும் ஐரோப்பியர்களையும் வியாபாரப் போட்டியில் வெல்லலாம்.

கல்வி:—விவசாயத்திலும், கைத் தொழிலிலும், வியாபாரத்திலும் நமது தேற்சி விளங்குகிறது. இனிப் படிப்பில் நமது நிலைமையைச் சற்று ஆராய்வோம்.

(1) ஆண்கள்:—எழுதப் படிக்கத் தெரிந்த ஆண்களுள், நாம் 7-வது ஸ்தானத்தி லிருக்கிறோம். பிராமணர் 100-க்கு 65-பேரும், வைசியர்கள் 52பேரும், சௌராஷ்டிரர் 33பேரும், விஸ்வ பிராமணர் 26பேரும், வேளாளர் 25பேரும், சுதேச கிறிஸ்தவர் 20பேரும் எழுதப்படிக்கத் தெரிந்திருக்கையில் நம்மவருள் 18-பேருக்கு மாத்திரமே எழுதப்படிக்கத் தெரியும்.

இவர்களில் இங்கிலீஷ் படித்தவரின் தொகையைப் பார்க்கையில், நாம் 9-வது படியிலிருக்கிறோம், பிராமணர் 1000-க்கு 155 பேரும், சுதேசக் கிறிஸ்தவர் 44-பேரும், வேளாளர் 21பேரும், சௌராஷ்டிரர் 17பேரும், வைசியர் 15பேரும், மகம்மதியர் 9பேரும், விஸ்வ பிராமணர் 4பேரும் ஆங்கிலம்பயின்றிருக்கையில், நம்மில் 1000க்கு 3பேர்க்கதிகமில்லை. நம்மவருள் பி. ஏ. பட்டம் தரித்தவர் சில பேர்களே இருக்கின்றனர். எவ்வளவு பரிதாபமான நிலைமை.



பெண்கல்வி:—நமது பெண்களின் நிலைமையைப் பார்த்தாலோ, இன்னும் பரிதாபம். எழுதப் படிக்கத் தெரிந்தவருள் நமது பெண்கள் 9-வது ஸ்தானத்தி லிருக்கின்றனர். பிராமணப் பெண்கள் 1000க்கு 93பேரும், சுதேசக் கிறிஸ்தவர் 85பேரும், வைசியர் 25பேரும், தீயர் 23பேரும், வேளார் 18பேரும், மகம்மதியர் 11பேரும், விஸ்வ பிராமணர் 9பேரும், சௌராஷ்டிரர் 9பேரும், இருக்க, நமது பெண்கள் 1000-க்கு 7-பேர்களிருக்கின்றனர்.

இங்கிலீஷ் தெரிந்தவர்கள் கிறிஸ்தவப் பெண்கள் 1000-க்கு 15-பேரும், பிராமணர் 2-பேரும், தீயர் ஒருவரும் இருக்கிறார்கள். நமது பெண்கள் 3-லக்ஷத்துக்கு 5பேர் உளர். நமது கல்வி நிலைமை மிகவும் அவமானத்தைக் கொடுக்கத்தக்கது. கல்வியில் பின்னடைந்தோர் நாகரிகமுள்ளவர்களென்று சொல்லப்படுவார்களா? கல்வியபிவிர்த்தியே உங்கள் முக்கிய நோக்கமா யிருக்கவேண்டும். இருக்கிற பாடசாலைகளை விர்த்திசெய்து, புதிய பாடசாலைகளை ஸ்தாபித்து வித்யாதானத்தைச் செய்வீர்களாக.

மகமை:—நமது பொதுஸ்தானங்களைச் சற்று கவனிப்போம் நம் முன்னோர்கள் குலாபிமானிகள்; பொது நலப்பிரியர்கள்; தர்மசிந்தையுடையவர்கள்; தெய்வத்திற்குப் பயந்து நடப்பவர்கள். நம் குலத்தவர்க்குப் பகைவரால் நேரிடும் கஷ்டங்களை நிவர்த்தி செய்வதற்கும், நமது குல அபிவிர்த்தியின் பொருட்டும், அவர்கள் வியாபாரம் ஆரம்பித்த நாள்முதல, மகமையென்னும் பொதுநிதியை ஸ்தாபித்து, ஒழுங்காய் வசூலித்து, முறைப்படி செய்து வந்தனர். அந்நிதியிலிருந்து, பேட்டைகள், நந்தனவனங்கள், தேவாலயங்கள் முதலியன கட்டிவைத்தனர்.

நமது குல முன்னேற்றத்திற்காக ஏற்படுத்தப்பட்ட இம்மகமையானது நமக்குத் தற்காலத்தில் பயன்படாமலிருக்கிறது. நம் முன்னோர்கள் இக்காலத்திருப்பின், நமது குல முன்னேற்றத்திற்கு அநேக

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection.

வசியமான விவசாயக்கல்வி, தொழிற்கல்வி, வியாபாரக்கல்வி, உத்தியோகக்கல்வி முதலிய வற்றிற்கே இந்நிதிமுழுமையும் செலவிடுவர். நாம் இப்போது என்ன செய்துகொண் டிருக்கிறோம்? பொதுநன்மையை முற்றிலும் மறந்து விட்டோம் குலாபிமான மென்பது இன்னதென்று தெரியாது. குலாபிமான மில்லாதாரிடத்து தேசாபிமானம் எங்கிருந்து தோன்றும். பொதுநிதிகளை யபகரிக்கத் தலைப்பட்டு விட்டோம். பொது ஸ்தாபனங்களைக் கவனிப்பதில்லை. அவற்றைச் சரிவர மேல் நடத்துவதுமில்லை. பொதுஸ்தாபனங்களிலிருந்து லாபமடைய விரும்புகிறோம். மகமைத்துட்டில் காத்துட்டு எடுத்தால் சுவாமி கண்ணைக் கெடுத்துவிடுவாரென்றும் காதைக் கெடுத்து விடுவாரென்றும் நம் முன்னோர் கூறினர். இப்போது ஆயிரக்கணக்காக மகமைநிதியை விழுங்கிக்கொண்டு வருகிறோம். கடவுள் ஒன்றும் செய்யவில்லை. மகமை நிதியை நமது சொந்தக் காரியங்களுக் கெல்லாம் உபயோகிக்கிறோம் வரவு செலவு கணக்கு வைப்பதுங் கிடையாது. சில சமயங்களில் வரவுக்குமேல் செலவு சொல்லுகிறோம். ஆனால் கணக்குக் காட்டுவதில்லை. இன்ன விஷயத்துக்குத் தான் மகமைப் பணத்தை வினியோகப் படுத்தவேண்டுமென்ற நிபந்தனையு மில்லை. முனிஸிபாலிட்டியில் மெம்பர் ஸ்தானம் பெற மகமையைச் செலவிடுகிறோம். ஒரு ஊருக்குக் கலியாணத்துக்குப் போவதற்கும் மரியாதை செய்வதற்கும் மகமையை உபயோகப்படுத்துகிறோம். ஸ்கூல் இன்ஸ்பெக்டர்களுக்கு சப்ளை செய்வதும் இதிலிருந்தே, இதர கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்கு சப்ளை செய்வதும் இதிலிருந்தே கட்சிகள் ஏற்படுத்தி, கோர்ட்டில் செலவழிப்பதும் இதிலிருந்தே. சகோதரர்களே! நமது க்ஷத்திரிய தர்மம் எங்கே? நமது குலாபிமானம் எங்கே? நமது பொது ஜன நன்மைஎங்கே? நமது ஒற்றுமை எங்கே? நமது உறவின் முறைக்கட்டு எங்கே?

பேட்டை:—நமது பேட்டைகளைச் சற்று உற்றுப் பார்ப்போம். மராமத்துக் கிடையாது. பேட்டை வருமானத்தை வசூலிக்க நாதியில்லை. பேட்டை நிலங்களை யெல்லாம் பிறர் அபகரிக்கிறார்கள். இவர்களைத் தடுப்பார் இல்லை. இராமநாத புரம் பேட்டை பாதிக்குமேல் கிரையமாகிவிட்டது; மதுரை கீழப்பேட்டையைக் கவனிப்பாரில்லை; இவ்வூர் காரைப்பேட்டையின் நிலைமையைப் பாருங்கள். இன்னும் அநேக பொதுப் பேட்டைகள் இருக்குமிடமே தெரியாது.



இதற்காகவா நம் முன்னோர் பேட்டைகள் கட்டினர். நிலங்களைச் சம்பாதிக்கவும் பேட்டைகள் கட்டவும் அவர்கள் பட்டபாடென்ன? அடைந்த கஷ்டமென்ன? நமது சொந்தச் சொத்தின்பேரில் இப்படி அலட்சியமா யிருப்போமா?

தேவஸ்தானம்:—நமது தேவஸ்தானங்களுக்கு எவ்வளவோ பொதுச் சொத்துக்கள் விடப்பட்டிருக்கின்றன.

அவற்றிற்குச் சரியான கணக்கு உண்டா? வரும்படியைச் செவ்வையாய் வசூல் செய்கிறோமா? வசூலித்த பணத்தை கிரமப்படி செலவிடுகிறோமா? தேவஸ்தானம் கமிட்டி மெம்பர்களுக்காவது வருஷத்தில் இவ்வளவு வரவு இவ்வளவு செலவு என்றாவது தெரியுமா? தேவஸ்தானத்துக்குச் சொந்தமான நிலத்தை நம் நிலத்தோடு சேர்த்துக் கொள்ளலாமா? தேவஸ்தானம் வரும்படியை கையாடல் செய்யலாமா? இவற்றைக் கவனிப்பதற்கு யாருமில்லையா?

சகோதரர்களே? நமது பொதுஸ்தாபனங்களின் தற்கால நிலைமையையும், நமது மகமைச்சீர் கேட்டையும் சற்று கவனிப்பீர்களானால், கண்ணீர்விடாம லிருக்கமுடியாது, நாம் நம்பிக்கைத் துரோகிகளாகிவிட்டோம்; நமது கடமையைச் செய்வதில்லை; சுய நயத்தையே பெரிதாய்ப் பாராட்டுகிறோம். நமது பகைவர் நமக்கு விரோதமாய்ச் செய்வதைக் கவனிப்பது மில்லை; தலையிட்டு உழைப்பவரையுந் தடுக்கிறோம்; இது என்ன விபரீதகாலம்! உன்னதஸ்தானமும் முதல் மரியாதையும் வேணுமென்கிறோம்; ஆனால் வேலை ஒன்றும் செய்யோம் என்கிறோம். ஆறு ஊரார்கள் தான் பெரியவர்க ளென்கிறோம்; மற்றவர்களெல்லாம் நாடார்களல்ல போலும். இந்த ஆறு ஊர்களிலும் என் ஊர் பெரிது; உன்னூர் சிறிது; என்னூர் ட-ா-ா-ஸ்ரீ ஊர்; என்று போராடுகிறோம். இப்போராட்டினால் பொதுச் சுதந்தரங்களையும் இழந்துவிடுகிறோம். வீண் சச்சரவு செய்துகொண்டு, கோர்ட்டுக்குப் போய் ஏராளமான திரவியத்தை விரையம் செய்கிறோம். ஒருவருக் கொருவர் உள்ள விரோதத்தைப் பொது காரியங்களிலும் நுழைத்துக் காரியத்தைப் பங்கப்படுத்துகிறோம்.

நமது இரட்சிப்பு:—நமது தேசத்தில் புதிய உணர்ச்சிதோன்றி, பழைய நிலைமை மாறுபட்டு, ஒவ்வொரு குலத்தினரும் ஒற்றுமையுடன் பொதுக்காரியங்களில் சிரத்தை காட்டி ஒத்துழைத்து, முன்னேறிச்

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

செல்லும் இக்காலத்தில் நமது குலத்தவர் ஸ்திதியும், பொது ஸ்தாபனங்களின் நிலைமையும் இவ்வாறாயின. "உலகத்தில் தர்மம் குன்றி அதர்மம் அதிகரிக்குங் காலத்தில் நான்வந்து அவதரிப்பேன்" என்று கிருஷ்ண பகவான் கூறியதுபோல், நம் குலத்தை இரட்சிக்கும் பொருட்டு, குலாபிமானமே உருவாய்வந்த ஒரு மகா புருஷன் வெளித் தோன்றினர்.

அவர்தான் லேட் ராவ் பகதூர் T. இரத்தினசாமி நாடார்.

நான் பெரியவன், நீ சிறியவனென்றும், என் ஊர் பெரிது, உன் ஊர் சிறிது என்றும், நான் உத்தரமாற நாட்டான், நீ தக்ஷணமாற நாட்டான் என்றும்; நான் ஆறூரில் சேர்ந்தவன், நீ ஆறூரில் சேர்ந்தவனல்லவென்றும்; நான் ஊர்க்காரன், நீ பேட்டை தலத்தான் என்னும் வித்தியாசம் பாராட்டி, இறுமாப்படைந்து கண்ணை விழித்துக் கொண்டு நித்திரை செய்யும் நாடார்களுக்குள் கிளர்ச்சியுண்டுபண்ணி, ஒற்றுமையை நிலைநாட்டி, அபிவிர்த்திக் கனுகூலமான மார்க்கங்களை அனுசரித்து, தேச பந்தய ஓட்டத்தில் இதர குலத்தினருக்குப் பின்னடையாமல் முன்னேறிச் சென்று, நமது சுதந்தரங்களையும் உரிமைகளையு மடைந்து, நமது குலத்தை மேன்மைப்படுத்தும் உன்னதநோக்கத்துடன் ஒரு சங்கத்தை ஸ்தாபித்தனர். இதுதான் நமது நாடார் மகாஜன சங்கம்.

பொது நிலைமை:—நமது மகமை நன்றாய் நடத்தப்படாமல் பலவாறாகப் பிரிந்து, அரிசிக்கடை மகமை, புளிக்கடை மகமை, உப்புக்கடை மகமையென்று தனித்தனியாய் நடத்தப்பட்டு வருகின்றன. இதற்குக் காரணம் ஒற்றுமைக்குறைவே.

குடியேற்ற நாடுகளிலோ, ஊருக்கொரு மகமை. சாத்தங்குடிக்கொரு மகமை, சிவகாசிக்கொருமகமை, விருதுபட்டிக் கொருமகமை; கிராமாந்தரங்களிலோ, கட்சியில்லாத கிராமத்தைப் பார்ப்பது அபூர்வம். ஒரு ஊரார் தங்கள் காரியங்களைச் சீர்திருத்த சக்தியற்றவர்களாயிருக்கின்றனர். வேறே யாரையாவது அழைத்து ஒழுங்குபடுத்துகிறதுமில்லை.

சங்கம்:—இத்தகைய நிலைமையில், பல பெரிய மனுஷர்கள் சேர்ந்து, சீரழிந்த ஊர்களுக்குச் சென்று திருத்தம் செய்தல் அவசியம். பலவூர் முக்கியஸ்தர்களை ஒருங்கே சேர்த்து, பொதுஜன ஊழியத்



தைக் கற்பிக்க நமது சங்கம் முயல்கிறது; அறிவு விருத்தியாலே இக்குறைகளெல்லாம் நிவர்த்தியாகுமென், றுணர்ந்து கல்வியைப் பரவச்செய்ய பெருமுயற்சிசெய்து வருகிறது.

உபசங்கங்கள்:—நமது சங்கத்துக்குப் பக்க பலமாக அநேக கிளைச்சங்கங்கள் ஆங்காங்கு தோன்றியிருக்கின்றன. நமது முன்னேற்றத்தில் வாலிபர்களுக்குள் தோன்றியிருக்கும் ஊக்கத்தை இவை பறைசாற்றுகின்றன.

நமது சங்கத்தின் நோக்கத்தைப் பரவச் செய்வதும், சங்கத்தினாலுண்டாகும் பயனை யெடுத்துக் கூறுவதும், சங்கத்துக்கு மெம்பர்கள் மூலமாய் நிதிசேர்ப்பதும் உங்கள் சங்கத்தினரது முக்கிய நோக்கங்களில் ஒன்றாயிருக்கவேண்டும்.

நாடார்குல மித்திரன்:—நமது குலத்தை மேன்மைப் படுத்துவதற்கு முக்கிய சாதனங்கள் நமது சங்கங்களும் பத்திரிகைகளுமே. நமது சங்கத்திலிருந்து ஒரு பத்திரிகை நடைபெற்று வரவேணுமென்று வருஷாவருஷம் தீர்மானம் செய்யப்பட்டு வருகிறது. ஆனால் காரியம் ஒன்றும் நடக்கவில்லை. இவ்வூரில் 'ஞானோதயம்' என்ற பத்திரிகை வெளித்தோன்றி அதன் பத்திராதிபரோடு அஸ்தமித்து விட்டது. இச்சமயத்தில் அறுப்புக் கோட்டை மகா-ள-ள-ஸ்ரீ ரூ. ஆ. முத்துநாடாரவர்கள் 'நாடார்குல மித்திரன்' என்னும் மாதாந்தப் பத்திரிகை ஆரம்பித் திருக்கின்றனர். இதனால் அவர்களது தொழிலுக்கு அசௌகரியமும் ஏற்படும், அவற்றை ஒருபொருட்டாயெண்ணாது, குலாபிமானத்துடன் பாடுபட்டு வருகிறார்கள். பத்திரிகையின் நன்மையைப்பற்றி உங்களுக்குக் கூறவேண்டியதில்லை. இப்பத்திரிகை புதிதாய் ஸ்தாபிக்கப்பட்ட தாகையால், ஓங்கி வளரச்செய்வது குலாபிமானிகளாகிய உங்கள் கடமை. 10லக்ஷம் ஜனங்களடங்கிய நம் குலத்தில் 5 ஆயிரம் சந்தாதார்கள் கிடைக்க மாட்டார்களா? ஐயாயிரம் சந்தாதார்கள் கிடைத்தால், இதை முதல்தரத்தினப் பத்திரிகையாக்கலாம். சீக்கிரத்தில் இது வாரப்பத்திரிகை யாகும்போலிருக்கிறது. கடவுள் ஆசிர்வதிப்பாராக!

தேசப்பயிற்சி:—நமது குலக்கர்மம் யுத்தம் செய்தல் என்று தெரிந்து கொண்டோம். காலமாறுபாட்டால் குலத்தொழிலை கைவிட்டு

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

நூதனமாய் வியாபாரம், விவஸாயம் முதலியனவற்றை அனுசரிக்கும் படி நேரிட்டது. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கீழ், நமது தொழிலை மாற்றும்படி செய்த நிர்ப்பந்தங்களெல்லாம் நீங்கிவிட்டன.

நமது பூர்வீகத் தொழிலைமறுபடியும் அனுஷ்டிப்பதற்கு இதுவே தருந்தகாலம். அபாய காலத்தில் தேசத்தினரைக் காப்பாற்றுவதல்லவா தேசபக்தி. இராணுவத்தில் சேர்ந்து நமது க்ஷத்திரிய வன்மையை வெளிப்படுத்தல் வேண்டும்.

இராணுவத்தில் சேராதவர்கள், குஸ்தி, சிலம்பம் முதலியன பயிற்சி செய்து வீரசூரர்களெனப் பேர்வாங்கவேணும். ஜெகப்பிரசித்திபெற்ற 'இராமநாடார்' தேரிநாடார்போன்றவர் நம்குலத்தில் எத்தனையோபேர் தோன்றுவர். தற்காலம் நமது சக்கரவர்த்தியால் நன்கு மதிக்கப்பெற்ற அவிரியா நாடார்கள் எத்தனையோபேர் தோன்றுவர்.

சட்டசபைஸ்தானம்:—இன்னொரு முக்கியமான விஷயம்சொல்ல விரும்புகிறேன் புதிதாய் நமது தேசத்துக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அரசியல் திருத்தச் சட்டத்தின்படி, நமது மாகாணச் சட்ட சபையில் நியமிக்கும்படி எத்தனையோ தடவை கெஞ்சிக் கேட்டோம். நம்மிலும் ஜனத்தொகையில் குறைந்தவர்களுக்கு நியமனஸ்தானம் கிடைத்திருக்கிறது. ஆனால் நமக்குக் கிடைக்கவில்லை, புதிய சட்ட சபையில் பிராமணரல்லாதாருக்கென்று சில ஸ்தானங்கள் ஒதுக்கிப்போகாமல் ஒரு ஸ்தானமாவது பெற முயற்சி செய்யவேண்டும். நமது 'நாடார் குல மித்திரனும்' இதற்காகப் பாடுபடுவான்; நமது நாடார் மஹாஜன சங்கமும் பாடுபடும். நீங்களும் இதற்காக உழைத்து நமது விருப்பத்தைப் பூர்த்திசெய்யவேண்டும்.

விஷயச்சுருக்கம்:—க்ஷத்திரிய குலத்திலுதித்து அரசுபுரிந்த நம் குலம் இப்போதைய நிலைமைக்கு வந்திருக்கிறது. நமது குலத் தொழிலை விட்டுப்புதிய தொழில்களை அனுசரித்து விட்டோம். நமது உன்னத பதவியை மீண்டும் அடைவதற்கு, தற்காலத்துக் கேற்ப அநேக காரியங்கள் செய்யவேண்டியதிருக்கிறது. அவற்றுள் முக்கியமானவற்றைச் சுருக்கமாய்க் கூறுகிறேன்.

1. நமது குலத்தையும், குலத்தொழிலையும் வெளிப்படுத்தல்.

2. நமது குலப்பெயர் 'சான்றூர்'என்றும், நமது குலத்தொழில் 'இராணுவத் தொழில்' என்றும் கவர்ன்மெண்டுக்குத் தெரிவித்து சென்ஸஸ் ரிப்போர்ட்டில் தவறாய்ச் சொல்லப்படும் விஷயங்களை ரத்து செய்தல்.

3. பட்டாளத்தில் சேருதல், சிலம்பம் கற்றல்.

4. மகமைமையைச் சீர்தூக்கல்.

5. பொதுஸ்தாபனங்களை ஒழுங்காய் நடத்தல்.

6. உத்தியோகக் கல்வி, விவஸாயக் கல்வி, தொழிற் கல்வி கற்றல்.

7. 'ஹாஸ்டல்' கள் கட்டல்; 'ஸ்காலர்ஷிப்' ஏற்படுத்தல்.

8. கிராமங்களில் நம்மவர் படுங்கஷ்டங்களை நிவர்த்திசெய்தல்.

9. கட்சிகளை வேரறுத்து ஒற்றுமையுண்டு பண்ணுதல்.

10. நாடார் மஹாஜன சங்கத்தையும், நாடார் குல மித்திரனையும் ஆதரித்தல்.

11. மாகாணச் சட்ட சபையில் ஸ்தானம் பெறல்.

முடிவு;—மேற்கூறிய காரியங்களுக்காக உழைப்பது வாலிபர்களாகிய உங்களது முக்கிய கடமை. நமது குல முன்னேற்றம் உங்கள் கையில்தான் இருக்கிறது. 10-லக்ஷம் ஜனங்களை முன்னேற்றக் குறைந்தது 100-பேராவது வெளியேற வேண்டும்.

இப்படிச் செய்ய வல்லவர் நீங்கள்தான். இவ்விஷயங்களை உங்கள் சொந்தக்காரியங்களாகப் பாவித்து உழைப்பீர்களாயின், வெகு சீக்கிரத்தில் நம் குலம் மேன்மையடைந்து, நமது கஷ்டங்களெல்லாம் நீங்கி நமது தேசத்துக்கு ஓர் ரத்னம்போல் துலங்கி, நமது இந்து மாதாவின் அருமைப்புதல்வராவீர்கள்.

---

## பத்திராதிபர் குறிப்பு.

நாடார் மகாஜன சங்கம்:—இச்சங்கத்தின் கௌன்சில்மீட்டிங்கு, மதுரை மகாஜன சங்கம் ஆபீசில் 11-1-20 மாலை மணி 2-க்கு பட்டிவீரன்பட்டி ஸ்ரீமான் ஊ. பு. அ. மாரிமுத்து நாடார் அவர்கள் தலைமையின்கீழ் கூடியது. சுமார் 20 மெம்பர்கள் ஆஜராயிருந்தனர். ஷை சங்கத்தின் பிரஸிடெண்டாயிருந்து சமீபத்திற்காலஞ்சென்ற, ஸ்ரீமான் வெ. பொன்னுசாமி நாடார் அவர்களுக்கு அநுதாபத் தீர்மானமும், ஷை ஸ்தானத்திற்கு கனம் த. குருசாமி நாடார் அவர்களையே நியமனம் பெறும்படிக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்றும், தீர்மானிக்கப்பட்டது.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

ஐக்கிய நாடார் சங்கம்:— தூத்துக்குடி ஐக்கிய நாடார் சங்கத்தின், முதல்வருடப் பூர்த்திவைபவம், கனம் P. பழனிவேல் நாடார் B.A., அவர்கள் அக்ராசனத்தின்கீழ் ஜனவரிமாதம் 23,24,தேதிகளில் வெகு விமரிசையுடன் நடைபெற்றது. இதுபோல் சமீபத்தில் அங்கு நடைபெறும் நமது மகாஜன சங்கம் 6-வது கான்பரென்ஸ் கூடுவதற்கான, வேலைகளை வெகு துரிதமாய்ப் பார்த்து, உபசரணைக் கமிட்டி மெம்பர்களைத் தெரிந்தெடுத்து, ஸ்ரீமான் மா. வே. ஷண்முகவேல் நாடார் அவர்களைச் சேர்மனாக யேற்பாடு செய்வார்களென்று நம்புகின்றோம்.

மரணாநுதாபம்:—விருதுபட்டி மேலக்கடை பிரபல வியாபாரியும், க்ஷத்திரிய வித்தியாசாலை மானேஜரும், இராமநாதபுரம் ஜில்லா போர்டு மெம்பரும், நாடார் மகாஜன சங்கம் 5-வது கான்பரென்சில், உபசரணைக் கமிட்டி சேர்மனாகவுமிருந்த, Mr. ஷண்முகசுந்தரநாடார் அவர்களருமைப் பிதாவுமான், கனம். சு. ப. பொன்னப்ப நாடார் அவர்கள், 14-1-20ல் இம்மண்ணுலகை விட்டு விண்ணுலகெய்தினர். எல்லாம் வல்ல இறைவன் இவரின் பந்துமித்திர புத்திரருக்கு ஆறுதலளிப்பானாக.

குண்டுச் சத்தமுங் கூக்குரலும்:—சமீபத்தில் அமிர்த சரஸில் நடந்த அமளியில், நிரபராதிகளான ஜனங்கள் மீது தயா தாக்ஷண்யமின்றி ஜெனரல் டயர் சுட்ட குண்டுச்சத்தமானது, இங்கிலாந்தின் செவிக்கு யெட்டாமற்போனாலும், ஹண்டர் கமிட்டிமுன்பு சுட்டேன் சுட்டேன். தோட்டாத் தீரும்வரைச் சுட்டேன். இருந்தால் இன்னமுஞ் சுட்டிருப்பேன். என்று ஷை யார் கூறியசப்தம் இங்கிலாந்திற் கெட்டவே; அங்குள்ள பத்திரிகைகளெல்லாம், அநுதாபக்கூச்சல் இடுகின்றன. இதற்கெல்லாம் நமது இந்திய மாதின் செல்வப்புதல்வர்கள் கல்வித் திறமைதான், காரணம்.

இந்தியரும் தேவாலயமும்:—இவ்வருடம் சென்னையிற் கூடிய பிராமணரல்லாதார் மகாநாட்டில், எல்லா இந்தியருக்கும் கோயில் முதலிய விடங்களிற் சமவுரிமை யுண்டு. என்ற தீர்மானம் நிறைவேறியிருக்கின்றது. இதை அநுபவத்திற்குக் கொண்டுவந்து அதன்படி நமது இந்தியத்தாயின் சொந்த மக்களாகிய, சகல இந்தியர்களையுங் கோயிலில்விட்டுக் கூட்டத்திற்கூடிக் கண்ணுங்கருத்துங் களிக்கப்பார்ப்பவான்றோ, உத்தம தேசாபிமானிகள்.



கமுதியில் நடந்த கலவரம்:— இராமநாதபுரம் ஜில்லா கமுதி கலகக்கேஸ் கடந்த 3-மாதகாலமாக விசாரணையி லிருந்து 20-1-20-ல் கேசின் முடிவு பைசல் செய்யப்பட்ட விவரம்:—

எதிரிகள் இரண்டு கோஷ்டிகளாகப் பிரிக்கப்பட்டு விசாரித்தார்கள் முதல் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் 38-பேர் அதில் மூன்று நபர்கள் தேகசுகமின்மையால் விசாரிக்கப்படவில்லை. மற்றொருவர் விசாரணையின்போது இறந்துவிட்டார். ஐந்துபேர் விடுதலை யடைந்தனர். இருவருடைய விஷயம் ஐகோர்டின் அபிப்பிராயத்திற்கு விடப்பட்டிருக்கிறது. பாக்கி நபர்களுக்கு 2-வருட முதல் 7-வருடம் வரை கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

இரண்டாவது கோஷ்டியில் எதிரிகள் மொத்தம் 31-பேர் இவர்களுடைய விசாரணை நடந்து வருகின்றது. இது விஷயமாக நம்மால் எழுதப்பட்டிருக்கும் சரித்திரம் முடிவுகண்டு புத்தக ரூபமாக வெளியிடப்படும்.

---

## விநோதகணித வினா.

மதுரையிலிருந்து தூத்துக்குடிக்கு 20-மைல் தூரமென்று வைத்துக்கொள்வோம். ஒரு பிரயாணி மதுரையிலிருந்து ரயிலில் தூத்துக்குடிக்கி பிரயாணம் பண்ணுகிறான். அவன் ஏறியிருக்கும் அந்த ரயில் வண்டியானது, ஒருமணி நேரத்திற்கு (15) பதினைந்து மைல் போனவுடன் அதாவது அந்தரயில்வண்டி புறப்பட்டு ஒருமணிநேரம் ஆனவுடன் 'என்ஜினில்' ஏதோவொரு கெடுதல் யேற்பட்டு, வண்டியானது (25) இருபத்தைந்து மைல் பின்னகர்ந்துபோகிறதென்றும், அப்படிப் பின்னகர்ந்து போகும்பொழுது, ஒருமணி நேரத்திற்கு 25மைல் வீதம் போகிறதென்றும், வைத்துக் கொள்வோம். அப்படியானால் அந்தப் பிரயாணி எத்தனைமணி நேரத்தில் தூத்துக்குடிபோய்ச் சேருவான்? இந்த விநோதகணித வினாவிற்கு, சரியான விடை தெரிந்தோர், இப்பத்திரிகையின் வாயிலாக வெளியிடக் கோருகிறேன்.

S. செல்லையா.

குறிப்பு:—விடை கூறுவோர், சந்தாதாரராயிருத்தல் வேண்டும். சந்தாதாரரல்லாதாரின் விடையைப் பிரசுரிக்க வியலாது.

பத்திராதிபர்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

## பொது சமாச்சாரம்.

பொன்விளையும் பூமி:—பர்மா ரத்தினச் சுரங்கத்தில், 5-லக்ஷ ரூபாய் விலையுள்ள, ஓர் ரத்னக்கல் கிடைத்திருக்கிறது.

வித்தியாதானம்:—கல்கத்தா யூனிவர் சிட்டிக்கு பாரிஸ்டர் ராஷ்விஹாரிகோஷ், அவர்கள் 11-லக்ஷத்து 40-ஆயிரம் ரூபாயு குமார குருபிரசாத்சிங்கு, என்பவர் 4-லக்ஷத்து சொச்ச ரூபாய நன்கொடை கொடுத்திருக்கின்றார்கள்.

யுத்தநஷ்டம்:—பிரான்ஸில் வடபாகத்தில் யுத்தத்தினால் பா படுத்தப்பட்ட இடங்களைச் செப்பனிட 520 கோடி பவுன் செலவா மென்று, மதிப்பிடப்பட் டிருக்கிறது.

ஆகாரவுதவி:—பிரான்ஸில் ரொட்டியிலே கடுமையா யிருந்தத அத்தேச வாசிகளுக்குக் கிராக்கியின்றி ரொட்டி விற்கும்படி கவர் மெண்டார் 16 கோடி பவுன் கொடுத்திருக்கின்றனர். இந்தியா ஒருவேளைச் சாப்பாட்டிற்கு இல்லாமல் யேங்கித் தயங்கும் யேவ களுக் கிரங்குவாரில்லையா?

ஓர் மாதரசியின் தருமம்:—பம்பாய் மெஸர்ஸ் என். எ வாடியா. வி. என். வாடியா. ஆகியவர்களின் தாயாரும், பார வகுப்பைச் சேர்ந்தவருமான, ஸ்ரீமதி பாய்ஜெர்பாய் நௌரேஜி மியா, தமது ஆஸ்தியில் தமது குலத்தவரின் யேழைகளுக்காக நன்மைக் குபயோகிக்கும்படி, 50-லக்ஷ ரூபாய்க் கொடுத்திருக்கின் னர். நாடார்குலப் பிரபுக்கள் இதை கவனிப்பார்களா?

பலத்த பத்திரிகை:—7-கோடி ஜனத்தொகையுள்ள பிரான்ஸ் சத்தில், பாரிஸ் நகரிலுள்ள ஒரு பத்திரிகைக்கு, 50-லக்ஷம் சந்தாதா இருக்கின்றனர். 10-லக்ஷம் ஜனத்தொகையுள்ள நாடார் குலத்தவருக் ஓர் பத்திரிகை வேண்டியது அவசியமெனத் தெரிந்தும், நமது மித் ரன் பிறந்து ஆறுமாதமாகியும், 1000, சந்தாதாரராவது, ஸ்திர இருப்பார்களென்று சொல்லுவது கடினம்.

சென்னை:—இவ்வூர் முனிசிபல் 9-வது வார்டுக்கு டாக் எ. சி. ஆசீர்வாத நாடாரவர்கள் முனிசிபல் கௌன்சிலராகப் பொ ஜனங்கள் தெரிந்தெடுத் திருக்கின்றனர்.



சிவகாசி:—டி. ஆர். பி. காளியப்ப நாடார். கே. சி. ஏ. அருணா சல நாடார். இவர்கள் தாலுகா போர்டு மெம்பர்களாகத் தெரிந்தெடுத் திருக்கின்றனர்.

ஸ்ரீ வில்லியுத்தூர்:—இவ்வூர் முனிசிபல் கௌன்சிலராக, கனம் பெரியநாயகம் நாடார் நியமிக்கப் பட்டிருக்கின்றனர். இவர் இவ்வூர் ஹைஸ்கூல் தலைமை உபாத்தியாயரு மாவர்.

இவ்வூரில் பி. ஏ. வாசித்த பிராமண வாலிபரொருவர் பயித்தியம் பிடித்துத் திரிவதும் விந்தைதான்.

மதுரை:—ஜில்லா டிப்டிகலெக்டர் கனம் அன்புடையான் நாடார் அவர்கள், ஷை ஜில்லா தாலுக்கா போர்டு வைஸ்பிரசிடென்டாக நியமனம் பெற்றிருக்கின்றனர்.

வதுவார்பட்டி:—இவ்வூரில் பால்ய நாடார்கள் 40-பேர் சேர்ந்து ஓர் சங்கம் ஸ்தாபித்திருப்பதாகத் தெரிகிறது. எல்லாம்வல்ல இறை வன் நமது பால்ய நாடார்கள் மனதூக்கத்திற்கு உற்சாக மூட்டுவா ராகவும்.

ராஜபாளையம்:—ஸ்ரீ வில்லிபுத்தூருக்குத் தெற்கேயுள்ள இவ்வூ ரில் 3-2-20-ல் நாடார்கள் ஐக்கியக் கல்விச்சங்கம் ஒன்று யேற்படுத் தப் பட்டிருப்பதாகத் தெரிந்து சந்தோஷிக்கின்றோம்.

சாத்தூர்:—இங்குள்ள பால்யநாடார் சங்கத்தினர் பல கிராமங் கள் சென்று நமது குல முன்னேற்றத்திற்கு அரும்பெருங் காரியங் கள் செய்து வருகின்றனர். "முயற்சி யுடையார், இகழ்ச்சி யடையா ரல்லவா."

திண்டுக்கல்:—இங்கு நாடார்கள் சங்கம் ஸ்தாபிக்க வேண்டிய முயற்சிசெய்து வருகின்றனர். கூடிய சீக்கிரம் இவ்வூரிலும் நம்மவர் சங்கம் ஸ்தாபனமாகுமென்று எதிர்ப் பார்க்கின்றோம்.

## கல்லூருணி.

தைமாதம் 22ல், இவ்வூரில், பால்ய நாடார் சங்கம் ஒன்று புதி தாயுண்டா யிருக்கின்றது, பல இடங்களுக்கும், அழைப்புப் பத்திரி கை அனுப்பி யிருந்தும், அறுப்புக்கோட்டை நாடார் கல்விப்பிரசங்க சபையார்கள் மட்டும் சென்றிருந்தார்கள். அவர்களை பால்ய நாடார் கள், உற்சாகத்துடன் மேளவாத்தியத்தோடு எதிர்கொண்டழைத்தார் கள் சபாநாயகராய்த் தெரிந்தெடுத் திருந்த, அருப்புக் கோட்டை

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

ஸ்ரீமான் மு. மு. முத்துக்குமாரசாமி நாடாரவர்கள், வரமுடியா
போனதால், நாடார்குல மித்திரன் பத்திராதிபர் ஷை தலைமை வ
னம் வகித்தார். ஆ. சொக்கலிங்க பாண்டியரவர்கள், சங்கங்களி
லாகும், நன்மையைப்பற்றி ஒருமணிநேரம் பேசினர். மற்றுஞ் சி
பல உபன்யாசங்கள் செய்தார்கள். தலைவர் முடிவுரையில் கல்வி
பயனைப்பற்றியும், நாடார்மகாஜன சங்கத்தின் நோக்கத்தைப்பற்றி
வெகு விஸ்தாரமாய்ப் பேசினர். ஷை சங்கத்திற்கு, மகாத்மாகா
யவர்கள் ஜீவிய சரித்திரம், ஒன்று கொடுத்து, இதுபோல் பல பு
கங்கள் வாங்கிவைத்து எல்லோரும் ஓய்வு நேரங்களில்வந்து படி
வேண்டுமென்றும், அருப்புக்கோட்டை, நாடார் கல்விப் பிரச
சபையிலிருந்து, சுதேசமித்திரன் வாரமும்முறைப் பத்திரிகை ஆ
மாதத்திற்குத் தருவித்துக் கொடுப்பதாயும், அதை ஒவ்வொருவ
தவராமல் படித்தால் உலக சமாச்சாரங்களை, நன்குயறிந்து ராஜா
விஷயங்களையும், தெரிந்து பற்பல நன்மை யடையலாமென்று, வெ
அழுத்தமாகச் சொல்லி, சபையைப் பூர்த்திசெய்து வைத்தார்.

இவ்வூர் அருப்புக்கோட்டைக்கு, கிழக்கே 4 மைல் தூரத்
துள்ள கிராமம், நாலாவது வகுப்பு வரையுமுள்ள ஒரு கலாசா
மூண்டு. சுமார் பத்துவருஷ காலமாய், இதாஜாதிக்காரர்கள், தொ
ரவால் கோர்ட்டுகளில், அநேக திரவியங்கள் செலவாகி அவ்வூ
செல்வ நிலமை, பாதிக்கப்பட்டதாய்த் தெரிகிறது. அதனால், க
சாலை விஷயமாயும், கவனக்குறைவேற்பட்டு, சரியாய் நடைபெ
வில்லை, தற்சமயம் ஒரு கேசில், சில பெரிய மனிதர்களை, இதாஜா
யார்கள், கட்டுப்படுத்தி நடத்திவந்தது ஐக்கோர்ட்டில் அப்பீல்நட
கொண்டிருக்கின்றது. இருந்தாலும், பால்ய நாடார்கள் 40 பேர்
வரையும், சேர்ந்து ஷை சங்கத்தை ஸ்தாபித்து கல்வி யபிவிர்த்தி
யும், ஜனசமூகச் க்ஷேமலாபத்தையும் கவனிக்க முன்வந் திருப்பதா
தெரிகின்றது. கடவுள் அனுக்கிரகம் பண்ணுவாராக!

இதுபோலவே, நாடார்கள் வசிக்கு மற்ற கிராமங்களிலும், இ
ஜாதிக்காரர்கள் பொறாமையால், பல கஷ்டநஷ்டங்கள் ஏற்பட்டு வ
வதாயறிகிறோம். இதனால், நாடார்கள் வெகுவாய் நிலமைகுன்
கல்வி ஞானத்தைப் பெற்று, மேற்போக முடியாத பரிதாப நில
யேற்படுகின்றன. பகையானது வர, வர, வளர்ந்து 20 வருஷ
ளுக்கு, ஒரு தடவையாக, பெரிய கொள்ளைகளும், கொலைகளும்,
க்கின்றன. உதாரணமாக:—1860ல் அருப்புக் கோட்டையில கொ
ள்ளை, 1880ல் பல சில்லரைக் கலகங்கள், 1898ல் சிவகாசியில் கொ
ளையும், கொலையும், 1918ல் கமுதியில், கொள்ளை, அந்தோ! என்
பரிதாபம்!! இனிமேலாவது, இப்படிப்பட்ட சம்பவங்கள், நடக்கா
தடுத்தாலொழிய நாடார் சமூகம், நசுக்கப்பட்டுப் போம்.



நாடார் மகாஜன சங்கத்தின் அபிமானிகளும், நாடார்குல பிர
முகர்களும், கிராமங்கள் தோறுஞ் சென்று அவர்கள், கல்வி ஞானம்
பெற்று, சுகமாய் வசிக்கும்படியான மார்க்கத்தைச் செய்யவேண்டும்.
தாழ்த்தி யிருக்கப்பட்டவர்களை மேலே தூக்கிவைத்தால் தான், மேலே
யிருக்கப்பட்டவர்களுக்கு, இவ்வுலகில், புகழும், அவ்வுலகில் மோட்ச
முமுண்டாகும்.

வெளிக்கு அலங்காரமாய்த் தோன்றுங் காரியங்களில், மயங்கி,
அக்காரியங்களில் விருதாவாய்ப் பணங்களைச் செலவிட்டு, யேதோ பெ
ரிய காரியங்களை நிறைவேற்றி விட்டோம். இதற்குமேல் இனிச்செய்ய
வேண்டிய வேலை யொன்றுமில்லை யென்ற அகங்காரத்தை, கட்டோடு
விட்டொழித்து ஜனசமூக முன்னேற்றமே, தன்னேற்றமாய்க் கொ
ண்டு, உடல், பொருள், ஆவி, மூன்றையும் ஜன சமூகத்திற்கே, தத்
தம்பண்ணி இகபர சாதனங்களை அடையும்படி வேண்டிக்கொள்
கின்றோம். முருகதாஸன்.

---

## மதிப்புரை.

தமிழர்நேசன்:—இந்நேசன் புரட்டாசி மாதத்தியப் பத்திரிகை
ஒன்று வரப்பெற்றோம். இதில் பிராணிகளின் பிறப்பு வளர்ப்பும்,
படங்களுடன் வெகு அருமையாக எழுதப்பட்டிருக்கிறது. பௌதிக
சாஸ்திரம், ஒலிநூல், என்னும் நூல் அற்புதமா எழுதியிருப்பதை;
தமிழ்த்தினிமினிய தமிழறிவாளர்கள், எவரும் கவனிக்கத் தக்கது.
சென்னைத்தமிழிர் கல்விச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளி
வரும். வருஷச்சந்தா ரூ 3.

கமலாஸனி:—இது திருவாரூரினின்று வெளிவரும் மாதப்பத்
திரிகை வருடச் சந்தா ரூ 2. அதன் ஆசிரியர் T. S. தியாகராஜ
ஞானியார். சைவசமையத்தைப்பற்றி, வெகு தெளிவா யெழுதப்பட்
டிருக்கிறது. தமிழ்மக்கள் அனைவரும் வாங்கிப்படிப்ப தவசியமே.

அன்றியும் கண்ணகி, மணிமேகலை, யென்ற சரித்திரச் சுருக்கம்.
பஞ்சநூலிலொன்றாகிய, சிலப்பதிகாரத்தி லுள்ளபடி, யெழுதப்பட்டி
ருக்கிறது:—சுவாமி உருத்திர கோடீஸ்வரர்.- என்பவர் - அதன்
முழுச்சரித்திரமும், எழுதிக்கொண்டிருப்பதாய்த் தெரிகிறது. அப்படி
யெழுதி வெளியிட்டால், கோவிலன் சரித்திரத்தை,- உண்மைக்கொ
ருக நடித்துக்காட்டும், நாடகாபிமானிகளுக்கு, உபகாரமா யிருக்கும்.

தாரகநாதன்:—இது சென்னை அடையாறு என்றயிடத்தி லிருந்
து மாதமொரு முறை வெளிவருவது, வருடச்சந்தா ரூ 1, பிரம்மஞா
ன சபையைச் சேர்ந்த, அறிவாளிகளால் மனிதவர்க்கம் இகபர
சாதனங்களை, அடையத்தக்க நல்ல வியாசங்கள், எழுதப்பட்டிருக்
கிறது. பெரியோர் சிறியோர் யாவர்க்கும் மிக்க பயன் தரத்தக்கது.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

சௌராஷ்ட்ர:—இது மதுரையிலிருந்து வாரமொரு முறை வெளிவரக்கூடியது வருஷச்சந்தா ரூ 4-8-0 இதில் அம்மரபினர் தொழில், வர்த்தகம், கல்வி, முதலியவைகளில், முன்னேற்ற மடையத் தக்க பல வியாசங்கள், வெகு அருமையாய் எழுதப்பட்டிருக்கிறது. தேச க்ஷேமத்திற்கு அடிப்படையாக, ஒவ்வொரு சாதியார்களும், சீர்திருத்தத்திற் கேதுவான, வர்த்தமானப் பத்திரிகைகள்,- என்றுங் குன்றாமல் நடைபெறவேண்டி கடவுள்கிருபை செய்வாராக.

காலண்டர்:—விருதுபட்டி பழனி அன் கோ. காப்பி டீ, ஓர்க் ஷிலிருந்தும், இரங்கூன் சாமிவேல் பி. எ. அவர்கள் வைத்தியசாலையிலிருந்தும், தஞ்சை மு. ஆபிரகாம் பண்டிதரவர்களிடமிருந்தும்,

1920ம் வருத்தின் அழகிய காலண்டர்கள் வரப்பெற்றோம்.

பத்திராதிபர்.

---

## என் ஆடையாபரணம்.

நான் பிறந்து ஆறுமாதக் குழந்தையாகி விட்டேன், அன்போடு என்னைக் கையேந்தி வளர்க்கும் அபிமானிகள் நானணிந்து அழகாய்த் திரிந்துலவப் பிரதிமாதமும் எனக் கனுப்பிவரும் விதவித (வியாசங்களான) ஆடையாபரணங்கள் மென்மேலும் வந்துகொண்டிருப்பது சந்தோஷமே. ஆனால் யேககாலத்தில் சகல ஆடையாபரணங் (வியாசங்)களைத் தரித்து வெளிவந்துலவ தேகாங்கத்திற் சிறியவனா யிருக்கின்றேன். ஆதலின் அவ்வப்போது வேண்டுவதைத் தரித்து வெளிவர நேரிடுகின்றது. யாவற்றையும் தரித்துவர வேண்டுமானால் பிரதி மாதமும் 7-பாரம் அதாவது 56-பக்கத்துடன் வெளிவர வேண்டும். இதற்கிரட்டிப்பு செலவாகின்றது. என்னபிமானிகள் இதைக் கருதாது என்வியாச மெங்கே? யேனதை வெளியிடவில்லை? என்று கடுங் கோபத்தைக் காட்டிக் கடிதம் விடுகின்றனர். அவ்வித மெழுதுவோர் பொறுமை கடலினும் பெரிது. என்பதைத் தெரிந்தவர்கள்தான்.

என் அன்னை தந்தைபோன்ற அபிமானச் சந்தா நேயர்களே! உங்களின் வியாசங்களை ஒதுக்கிவிடாமல் என்னங்கத்திலணிந்து வெளிவருவேன். ஆனால் சற்றேறக் குறையக் காலதாமதமாகும். கவனியாது சினங்கொண் டெழுதினால் நானென் செய்வது. ஆக்கப் பொருத்தது ஆறப் பொறுங்கள். எனக்கென்று நேமிக்கும் அச்சுக் கூடத்திற்கு நன்கொடை கொடுங்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு புதுச் சந்தாதாரரைச் சேர்த்துதவுங்கள். மாதமிருமுறையாக நான் வெளிவரும் முயற்சியை நாடுங்கள். எல்லோருடைய வியாசத்தையும் யேககாலத்தில் அணிந்துவரும் என்னழகைக் கண்டு களிகூறுங்கள். இம்முறை நின்ற வியாசங்கள் மறுமுறை வருமென்பதை எண்ணுங்கள். வேணும் உங்களன்பான ஆசீர்வாதம். மித்திரன்.



# நாடார்குல மித்திரன் அநுபந்தம்.

## நாடார்குல நன்மணிகாள்! ஜாக்கிரதை!

கற்றோர்களே! அறிவாளிகளே!

தற்போது, நமது இந்தியாவுக்கு உற்பவித்திருக்கும் சொற்ப அரசியற் பதவியை பற்பல வகுப்பினர்களு முணர்ந்து நற்பதவிபெற நாட்டமுற்று அதற் கேதுவாகிய காரியங்களை அதிதீவிரமாய் செய்து வருகிறார்கள்.

தனவான்களே, இந்த சமயம் ஏழுலட்சம் ஜனத்தொகை கொண்ட நாம் யாருக்குவந்த விருந்தோவென யிருந்துவிட்டு பின் வருந்துவது, மறந்து செத்தா லுயிர்வராதென்னும் வாக்கியம் நம்மை மருவிவிடுமென்பதை மனதிற் கொள்ளுங்கள், சட்டங்களை யொட்டிய திட்டங்களை நாட்டுவதற்கு இடம்பெற காருண்ய கவர்னமென்டாரவர்கள், அவரவர்கள் சிரசிலே கட்டிவிட்டார்கள். இது சமயம் நாம் கெட்டித்தனமாயிருந்து இடம் பெறாதுபோனால், மட்டித்தனத்தில் நமக்குமேல் மற்றவர்க ளில்லையென்பார்க் கையமில்லை. ஆகவே:—

அறிவில் மிகுந்த அன்பர்காள்!

அஜாக்கிரதை வேண்டாம், நம்மில் அதிகாரம்பெற அந்தஸ்தும், குல நன்மையைக் கொண்டுழைக்கும் குணமும், சுயநலம் கருதா வண்ணமும், பொதுநலப் பிரியர்களான புண்ய சீலர்களைத் தெரிந்தெடுங்கள். அன்னவர்களுக்கே நம்மினத்தார்கள் ஓட்டுகளை யெல்லாம் அளிப்பதற்கு, இப்போதே ஆதரவைத் தேடுங்கள். காலம் குறுகிவிட்டது.

(காலங் கருதியிருப்பர் கலங்காது. ஞாலங்கருதுபவர்.) என்னும் பொய்யாமொழிப் புலவர்வாக்கை ஐயமில்லா துணர்ந்து, காலத்தை யிழந்துவிடாமல் உடனே கையிற் கங்கணங் கட்டிக்கொள்ளுங்கள். கற்றோர்களே, சிறிய கிராமங்களில் வசிக்கும் நம்மவர்களுக்கு விஷயந் தெரியாது. ஓட்டு வீணாய்ப் போய்விடும் போனபின் புலம்புவது புத்திமான்களுக் கழகல்ல ஆகவே, ஒவ்வொரு முக்கிய நகரங்களில் வசிக்கும் புத்திமான்களே முன்வாருங்கள், சாங்கோபசாங்கமாய்ப் பேசித் தழும்பேறிய நாவை, நமது ஜன சமூகத்திற்குழைக்கும் பிரசாரவேலையைத் தங்கள் சொந்தவேலையெனப் பிடித்து, இரண்டொருமாதம் பற்பலர்சேர்ந்து, பலகிராமங்கள்தோறுஞ்சென்று ஆங்காங்கு நம்மவர்களுக்கு அரிய பிரசங்கங்கள் மூலமாய் காரியங்க

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

ளைத்தெரிவித்து, ஒட்டை மற்றவர்களுக்கு காட்டிவிடாமல் இருக்கும் வேலையை இப்போதே பாராவிட்டால், நம்மெண்ணம் மாராய்விடும். அப்போது, குலபாதகத்திற்கு, அறிவாளிகளாகிய நீங்கள் தப்பமுடியாது. ஜாக்கிரதை. ஆனால் இந்தவிஷயம் யாவருக்கு யாவனேயெழுதியிருக்கிறனென்று நினைக்கக் கூடாது. அறிவாளிகளாகிய வொவ்வொருவரும் இத்தை தங்கள்தங்கள் கடமை என்று யெண்ணிச் சாதிக்க வேண்டும்; அறிவாளிகளே? நமது பத்திராதிபரவர்களுக்கு பொது உழைப்பான காரியம் யெவ்வளவோ யிருந்தும், அத்தோடுகூட சின்னையாபுர மென்னுங் கிராமஞ்சென்று அவ்விடத்தில் ஒரு சபை ஸ்தாபனஞ்செய்துவந் திருக்கிறார்கள். அவர்களைப்போல் நம்மிலனேகருக்குக் குல அபிமானம் வேண்டும். கனவான்களே, நமது நாடார்குல மித்திரனென்னும் வாடாவிளக்கை வளரச்செய்து பலசிறிய கிராமங்கள்தோறும் நாடச்செய்ய வேண்டுமென எண்ணத்துடன் முடிக்கிறேன்.

க. சு. அருணகிரிநாடார்.

---

## சகோதரத்வம் (முன் தொடர்ச்சி.)

அப்படியிருக்க விசாலமான பூமியின்கண் ஒரு பாகமாகிய இந்தியாவில் மட்டும் நான்கு ஜாதிகளை சிருஷ்டித்தாரென்பது உலகத்தையும் கடவுளின் மகிமைகளையும் அறியாமையாகும். ஒவ்வொரு தேசத்திலும் இந்த நான்குவித குணங்களில் ஜனங்களிருக்கின்றார்கள். பகவத் தியானத்தில் அதிக சிரத்தையுள்ளவர்கள் கடவுளின் மகிமைகளையும் அவரை வழிபடும் விதங்களையும் சன்மார்க்க முறைகளையும் மற்றவர்களுக்குக் கற்பித்து வருகிறார்கள். மேல் நாட்டில் அவர்கள் எக்ளிசியாஸ்டிகல் டிபார்ட்மெண்டில் (வைதீக லாகாவில்) வேலைக்கு அமருகிறார்கள். வீரத்தன்மை யுள்ளவர்கள் இராணுவத்திலும் வியாபாரம் விவசாயம் நெசவு தச்சு இரும்புசாமான்கள் செய்தல் முதலிய தொழில்களில் தேற்றமுள்ளவர்கள் அந்தந்த தொழில்களிலும் எஞ்சினோர் மற்ற கூலிவேலைகளிலும் அமருகிறார்கள் நம் தேசத்தி லேற்பட்ட ஜாதிவேற்றுமை களைப்போல் அங்கு யேற்படவில்லை. அது ஒரு பெரும்பாக்கியமே. அதனாலன்றோ மேல்நாட்டார் நவீன நாகரீகத்தில் அதிக முன்னேற்ற மடைந் திருக்கின்றார்கள்.

நமது தாய் நாடு முற்காலத்தில் அதிக நாகரீகம் பெற்று சீரும் சிறப்புடனும் செழிப்பாயும் வறுமை நோய் இன்னதென்று கூடத் தெரியாதபடி உன்னத ஸ்திதியிலிருந்தது. அப்பொழுதுள்ள ஜனங்கள்



ஒவ்வொருவரும் மற்றவர்களை சகோதரர்களைப் போல் பாவித்து வந்தார்கள். பின்பு சிறிதுசிறிதாக சகோதரவாஞ்சை குன்றத்தலைப்பட்டவுடன், தாயாதி சண்டைகள் ஏற்பட்டு அவர்கள் பலம் குறையவே அயல்நாட்டார் நமது தேசத்தைப் படையெடுக்க லானார்கள். அப்படிக் குடியேறினவர்களில் மகமதியஜாதியார் ஒருவர். சுமார் 30கோடி ஜனங்களுக்குமேல் நமது தேசத்தி லிருக்கிறார்கள். அவர்களில் மகம்மதியர் 7கோடியிருக்கிறார்கள். இந்துமதம், மகம்மதியமதம் கிருஸ்துமதம் முதலியவை இந்தியாவில் பரவியிருக்கின்றன. இந்துமதம் அநேக ஜாதிகளாகவும் குலங்களாகவும் பிரிந்திருக்கிறது. தலைமுறைதத்துவமாய் இந்தியாவில் வசிப்பவர்கள் எந்த மதம் அல்லது எந்த குலத்தைச் சார்ந்தவரா யிருந்தாலும், இந்தியராவார்கள். இவர்கள் தங்களுக்குள் சண்டை சச்சரவு செய்து கொள்ளாமல் ஒத்து வாழ்ந்தால் நம்தேச முன்னுக்குவரு மென்பதற்கு ஐயமில்லை. நமதுதேசத்திலுள்ளோர் அனைவரையும் ஒருதேசமாகக் கருதினால் ஒவ்வொருகுலத்தாரும் அந்த தேசத்தின் அங்கமாவர். ஓர் அங்கம் பிணியால் பிடிக்கப்பட்டால் தேகமுழுவதும் வருந்துவதுடன் மற்ற அங்கங்களும் ஒருமனத்துடனே வருந்துகின்ற. அங்கத்தின் நோயைத்தீர்க்க தம்மாலியன்ற உதவி புரிகின்றன. இவ்வாறு உதவி புரியாமல் நின்றுவிட்டால் தேகமுழுவதும் துன்பமுறும். இது அடியிற்கண்ட கதையால் நன்கு விளங்கும். ஒருநாள் வயிற்றிற்கும் மற்ற உறுப்புகளுக்கும் சச்சரவு உண்டாயிற்று: கைகால், கண் நாவு பற்கள் முதலிய உறுப்புகள் வயிற்றிற்காக நாமேன் பாடுபடவேண்டு மென்று தத்தந் தொழிலை நிறுத்திவிட்டது. கொஞ்சகாலத்திற்குள் கண் பஞ்சடையவும் கைகால் முதலியவை சோர்வடையவும் தலைப்பட்டன. அப்பொழுது தாம் செய்தது பிழையென் றுணர்ந்து தத்தம் வேலைகளைச் சரிவரச் செய்யத் தொடங்கின. இதுபோல் ஒரு குலத்தார் மற்றொரு குலத்தாரை ஏளனஞ்செய்து அவரவர்கள் அடையவேண்டிய உரிமைகளை அடைய வொட்டாமல் தடைசெய்வது நம்முன்னேற்றத்திற்கேதடங்கலாக யிருக்கிறது. இதை ஒவ்வொரு வர்ணத்தாரும் அறிந்துகொள்வது இன்றியமையாததாகும்.

ஒருவர் மேல்ஜாதி யென்றும் ஒருவர் கீழ்ஜாதியென்றும் இவர் தீண்டக் கூடியவரென்றும் இன்னொருவர் தீண்டக் கூடாதவரென்றும் எண்ணுவதை நம் மனதைவிட்டு என்று நாம் வேரோடு களைந்து விடுகிறோமோ அன்றுதான் நம் இந்தியா க்ஷேமத்தை அடையும். அந்த தினமே சுதினமாகும் அந்ததினமே ஜனங்களின் ஆசை கைகூடுவதற்கு அறிகுறியாகும். அந்ததினமே நம் நாகரீகம் மாடியின்மேல் வைக்கப்

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

பட்ட விளக்கைப்போல் ஜோதி மயமாய்ப் பிரகாசிக்கும். அந்த தினமே இந்தியர்களின் நாகரீகம் ஏனைய தேசத்தாரின் நாகரீகத்தை விட எண்ணிலாமடங்கு சிலாக்யமென்று உலகத்தாரால் போற்றப் படும். சமீபத்தில் நடைபெற்ற மதுரை ராமநாதபுரம் ஜில்லா கான்பரன்சில் இந்து மதத்தைக் சார்ந்த க்ஷத்திரிய வம்சத்தவர்களாகிய நாடார் குலத்தார் சுவாமி தரிசனத்திற்கு கோயிலுக்குள் செல்லலாமென்று தீர்மானிக்கப் பட்டது. சகோதரத்வமென்ற செடியானது புஷ்பிக்க ஆரம்பித்து விட்டதென்று நினைக்கிறேன். அன்பு என்னும் ஜலத்தால் பாய்ச் சப்பட்டு புஷ்பங்களெல்லாம் பிஞ்சாகி காயாகிப் பழமாகிப் பலன் கூடிய சீக்கிரத்தில் கர கடவுள் ஆசிர்வதிப்பாராக.

எம். ராமகிருஷ்ணய்யர்.

---

## விநோத விடுகதை வினா.

ஒன்பது எழுத்துக் குள்ளடங்கிய ஊர்ப்பெயர் ஒன்று அதில்:—

(1-2) எழுத்துகள் சேர்ந்தால் மேன்மையும், (3-4-9) எழுத்துகள் சேர்ந்தால் காடும், (7-8-9) எழுத்துகள் சேர்ந்தால் இராஜதானியையும், (6-8-9) எழுக்துகள் சேர்ந்தால் சமானமும், (1-1) எழுத்துகள் சேர்ந்தால் தெய்வலோகத்துப் பெண்ணின் பெயரையும், (1-4-9) எழுத்துகள் சேர்ந்தால் நாணும், (8-6-9) எழுத்துகள்சேர்ந்தால் தேவவிமானத்தையும், (3-5-6-4-9) எழுந்துகள்சேர்ந்தால்பணிதலையும், (3-6-4-9) எழுத்து-ள் சேர்ந்தால் முகத்தையும், (3-8-9) எழுத்துகள் சேர்ந்தால் ஓர் பக்ஷியின் பெயரையும், (6-4-9) எழுத்துகள் சேர்ந்தால் சம்பத்தையும், (3-2-9) எழுத்துகள் சேர்ந்தால் எதிர்காலத் தெரிநிலை வினைப் பெயரெச்சத்தையும், (6-5-1-8-9) எழுக்துகள் சேர்ந்தால் கிரியையும். (3-9-7) எழுத்துகள் சேர்ந்தால் தீச்செயலையும், (7-3-4-9) எழுத்துகள் சேர்ந்தால் பூமியையும், (6-2-9) எழுத்துகள் சேர்ந்தால் எதிர்காலத் தெரிநிலை வினைப்பெய ரெச்சத்தையும், (6-1) எழுத்துகள் சேர்ந்தால் ஓர் பிசினையும், (6-5-6-9) எழுத்துகள் சேர்ந்தால் ஓர் மிருகத்தின் உறுப்பையும், (7-2-3-9) எழுத்துகள்சேர்ந்தால் ஓர் மிருகத்தின் பெயரையும், ([illegible]-2-3-4) எழுத்துகள் சேர்ந்தால் வினையாலணையும் பெயரையும், (3-2-3-4) எழுத்துகள் சேர்ந்தால் வினையாலணையும் பெயரையும் குறிக்கும். மேற்கண்ட ஊரின் பெயரையும் பொருளுக்குச் சரியான அர்த்தமும் முதலில் சொல்வோருக்கு "ஸுசீலா" என்ற புஸ்தகம் ஒன்று பரிசளிக்கப்படும். விடை பகர்வோர் சந்தாதாராக இருந்தால் மிகவும் நலம்.

கூ. நா. கூ. சின்னமணி,
வெங்கலக் கடைத்தெரு,
மதுரை,


நமது மித்திரன்

# போஷகப் பிரபுக்கள்.

பாலக்காடு மாஜி கௌன்சிலர், ஒலவக்கோடு வர்த்தகம். ம-ள-ள-ஸ்ரீ, க. கு. பொன்னப்ப நாடார் வரவு ரூபா 50—0—0.

அருப்புக்கோட்டை நாடார் குலாபிமானியும், ஸ்ரீ அமுதலிங்கேஸ்வரர் தேவாலயதருமகர்த்தாவுமான ஸ்ரீமான் மு. மு. முத்துசாமிநாடார் அவர்கள் செல்வப் புதல்வர், மிஸ்டர், மு. மு. முத்துக்குமாரசாமி நாடார் வரவு ரூபா 50—0—0.

சென்னை பாண்டியகுல க்ஷத்திரிய நாடார்கள் ஐக்கிய சங்கத்தின் செகிரிடெரியும், பிரபல வர்த்தக மிராசுதாருமான மிஸ்டர், ஆ. ப. வை. கோதண்டராம பாண்டிய நாடார் வரவு ரூபா 50—0—0.

## வைத்திய சாஸ்திரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| மானிட மர்ம சாஸ்திரம் | ரூபா | 5 | 0 | 0 |
| மனோவசிய சாஸ்திரம் | ரூபா | 3 | 0 | 0 |
| ஹிப்னாடிஸம் | ரூபா | 5 | 0 | 0 |
| சிங்க வீரிய மாத்திரை | ரூபா | 3 | 0 | 0 |
| காத்த ரெத்னம் | அணா | 0 | 6 | 0 |
| சாரதா | அணா | 0 | 4 | 0 |
| சந்திரகாந்தி | ரூபா | 1½ | 0 | 0 |
| 50 அரிய ஔஷத முறைகள் | அணா | 0 | 12 | 0 |
| 5-பாகங்கள் | ரூபா | 2 | 0 | 0 |

கேட்லாக் வேண்டியவர்கள் இனாமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

S சாமிவேல்,
தென்காஞ்சி, இரங்கோன்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection


சுகமடையவும் உண்மையறியவுங் கருதுங்கள்.

## ஒரு முறை பரிசைக்ஷ பாருங்கள்.

### தந்தரோக நிவாரண சஞ்சீவிச் சூரணம்

பல்வலி பல்லரணை பல்லைசைவு பல் தெரிப்பு பல்கூச்சம், பல்புழு ஈறுகரைதல் இரத்தம் வடிதல் வாய் நாற்றம், வாய்ப்புண் முதலிய சகல தந்த ரோகங்களை உடனே நீக்கக்கூடிய, இந்த அருமையானபற்பொடி, நீண்ட கால ஆராய்ச்சியின்பேரில் பற்களுக்கு நன்மை செய்யக்கூடிய சகல கடைச்சரக்கு மூலிகைகள், யாவுஞ் சேர்க்கப்பட்டு அதனதன் முறைப்படியே பக்குவஞ் செய்து, அதனதன் அளவுப்படி மிக கவனத்துடன், கல்சார் பஸ்பம் கடைச்சரக்கு மூலிகைகள் யாவும் முறைப்படி சேர்க்கப்பட்டு தயாராகஇருந்து உபயோகித்தயாவருக்கும் மிகுந்த திருப்தியைக் கொடுத்திருக்கிறது. இப்பொடியை ஒரு முறை உபயோகித்தவர்கள் எவ்வித தந்த ரோகத்திற்கும் அஞ்ச வேண்டுவதில்லை, சகலரும் உபயோகிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன், மிகுந்த குறைந்தவிலைக்கு விற்கப்படுகிறது. வாங்கி உபயோகித்து மற்றவர்களுக்கும் அடைந்த நன்மையைத் தெரிவிக்கக் கோருகிறேன்.

மூன்று மாதத்திற்கு வரக்கூடிய டப்பி 1-க்கு விலை ரூ. 0-6-0

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

ஏஜண்டுகள் தேவை. விலாசம்,

**வி. அருமை நாயகம் நாடார்,**
போட்டோகிராபர்,
மருந்து ஷாப், தூத்துக்குடி.

---

பெரிய கம்பெனி! சகாயவிலை!! நயமானசரக்குகள்!!!

திருப்தி யில்லாத சரக்குகளைத் திரும்பப் பெற்றுக்கொள்வோம்.

எங்களிடம் காசியில் தயாராகும் பட்டு பீதாம்பர சேலைகள் துப்பட்டாக்கள் ரவிக்கைகள் தாவணிகள் பஸ்காணுக்கள் முதலிய சகல பட்டு தினுசுகளும் மிகவும் சகாய விலைக்கு ஏராளமாகத் தயாராக இருக்கின்றன.

வேண்டியவர்கள் எங்கள் "பட்டு பீதாம்பர கேட்லாக்" வரவழைத்துப் பார்த்துக் கொள்ளவேண்டியது. உடனே எழுதுங்கள்.

விலாசம்:—

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.
SILK PITAMBER COY.,
BENARES CITY.


---


Editor & Publisher S. A. Muthu Nadar "Nadarkula Mitran" Office Arruppukottah.
Printed at the Ravarathnam Press 34, Broadway Madras.

Tamil Heritage Foundation

தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials

e-Book series

an international NGO initiative to digitize old Tamil books and palm leaf manuscripts

visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை

தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection